1223

# KATHA MANJARI

## PART II

A Series of Moral Stories for youngsters

S. SWAMINATHAN

her :: MADURA

[Price As. 4.

# கதா மஞ்சரி

## மலர் 2

சிறுவர்க்குகந்த சிறு கதை விருந்து

மதுரை

வி. கூ. சுவாமிநாதன்

வெளியிட்டது

காபிரைட்] [விலை அணா 4

THE B. N. PRESS, EDUCATIONAL PRINTERS, MADRAS.

First Edition 2000 Copies.

# முன்னுரை

கதா மஞ்சரி என்னும், இந்நூல் மூன்று மலர்கள் கொண்டது. இவை ஆரம்பப் பாடசாலை மாணவர்க்காகவே இனிய எளிய நடையிலெழு தப்பெற்றவை. முதல் மலர் மூன்றும் வகுப்புக்கும், இரண் டாம் மலர் நான்காம் வகுப்புக் கும், மூன்றும் மலர் ஐந்தாம் வகுப்புக்கும் உபயோகமாகு மாறு தக்க நடையிலெழுதப் பெற்றுள.

இது கையெழுத்துப் பிர தியாயிருக்கும்போதே பல கல்வி இலாகா இன்ஸ்பெக்டர் அவர்களுடைய நன் மதிப் பைப் பெற்றிருக்கின்றது. ஆத லின் பாடசாலை அதிகாரிகள் இதனைப் பாடப் புத்தகமாக உபயோகிக்க வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

ஆக்கியோன்

# அட்டவணை


| | | | |
|---|---|---|---|
| 1. | கடவுள் ஒருவர் உண்டு | ... | 5 |
| 2. | தூக்கணாங் குருவிகளும் குரங்குகளும் | ... | 7 |
| 3. | காக்கையும் குடமும் | ... | 9 |
| 4. | ஆப்பை அசைத்த குரங்கு | ... | 10 |
| 5. | மூடன் சேர்க்கையால் வந்தகேடு | ... | 12 |
| 6. | கர்வங்கொண்ட வேலையாட்கள் | ... | 14 |
| 7. | கரடியும் இரண்டு சிநேகிதர்களும் | ... | 16 |
| 8. | தீவினை யகற்று | ... | 18 |
| 9. | நரியும் மரம் வெட்டியும் | ... | 20 |
| 10. | திருடனை ஏய்த்த சிறுவன் | ... | 22 |
| 11. | புத்திசாலித்தனமான தீர்ப்பு | ... | 24 |
| 12. | புத்திமான் பலவானுவான் | ... | 26 |
| 13. | முடவனும் கொம்புத்தேனும் | ... | 29 |
| 14. | பிராமணனும் புலியும் | ... | 31 |
| 15. | பேராசை கூடாது | ... | 33 |
| 16. | குரங்கும் முதலையும் | ... | 36 |
| 17. | துஷ்டர்களுக்கு இடங்கொடுக்கலாகாது | | 40 |
| 18. | பிறரை ஏமாற்ற எண்ணக்கூடாது | ... | 42 |
| 19. | பொய் பேசக்கூடாது | ... | 45 |
| 20. | அரசனும் வண்ணானும் | ... | 47 |
| 21. | எண்ணித் துணிக கருமம் | ... | 50 |
| 22. | சிலந்தி காப்பாற்றிய சிற்றரசன் | ... | 52 |
| 23. | குறும்பினால் உயிர் துறந்தவர் | ... | 54 |
| 24. | வானம்பாடியும் குஞ்சுகளும் | ... | 65 |
| 25. | அரசனை விரும்பிய தவளைகள் | ... | 58 |
| 26. | கரடியும் அரசிளங் குமாரனும் | ... | 60 |

# கதா மஞ்சரி

## மலர் 2

### 1. கடவுள் ஒருவர் உண்டு

ஒரு ஊரில் சங்கரன் என்னும்பெயர்கொண்ட ஒருவனிருந்தான். அவன் கடவுள் இல்லை என்றே சொல்லுவான். கோவிலைக் கண்டால் அலக்ஷியம் செய்வான்.

எவரேனும் அவனிடம் போய் கடவுள் உண்டு என்று சொன்னால் அடங்காத கோபம் கொள்ளு வான். "கடவுளை நீ நேரில் கண்டாயா? அவர் எங்கே இருக்கிறார்? அவருடைய நிறம் என்ன?" என்று பல கேள்விகளைக் கேட்பான். அதனால் அவனிடம் பேசுவதற்கு எல்லாரும் அஞ்சுவார்கள்.

ஒரு நாள் அவன் காட்டு வழியாகப் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். வெயில் கொடுமையாகக் காய்ந்தது. வழியில் ஒரு ஆலமரம் இருப்பதைக் கண்டு அங்குச் சென்றான். அதனடியில் படுத்துக் கொண்டு மேலே பார்த்தான். அதில் சிறிய பழங்

கள் நிறைந்திருப்பதைக் கண்டான். தனக்குள்ளே ஆலோசிக்கத் தொடங்கினுன்.

"இந்த ஆலமரம் எவ்வளவு விசாலமாக இருக்கிறது. சில மரங்கள் அரை மைல் சுற்றளவு இருக்கின்றன. இதன் காய்களோ மிகச் சிறியன வாக இருக்கின்றன. சுரை, பரங்கி முதலியவை மிகச் சிறிய கொடிகள். அதன் காய்களோ மிகப் பெரியவை. அவற்றை யெல்லாம் கடவுள் படைத்த தாகக் கூறுகிறுர்கள். சிறிய கொடிக்குப் பெரிய காய் களையும், பெரிய மரத்திற்குச் சிறிய காய்களையும் படைத்தாரே. அந்தக் கடவுள் எவ்வளவு அறிவில் லாதவராய் இருக்கின்ருர்," என்று பலவாறு சொல் லிக்கொண்டு படுத்து உறங்கினுன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் பெருங்காற்று வீசிற்று.மரத்திலிருந்து சில பழங்கள் கீழே உதிர்ந் தன. அவற்றுள் ஒரு பழம் சங்கரனுடைய கண் இமையின்மீது விழுந்தது. உடனே திடுக்கிட்டு எழுந்தான். "ஆகா! இப்பொழுதுதான் எனக்கு நல்ல புத்தி வந்தது. கடவுளை அறிவில்லாதவர் என்று கூறினேனே. நான் நினைத்தபடி இந்த மரத்திற்குப் பெரிய பழமாக இருந்திருந்தால் என் னுடைய கதி என்னவாயிருக்கும். தலை உடைந்து நான் இறந்துபோயிருப்பேன் அல்லவா? இவற்றை எல்லாம் கருதியே கடவுள் சிறிதாகப் படைத்திருக்

கின்றார் என்பதை அறிந்தேன்" என்று சொல்லிக் கொண்டான்.

"இதுவரையிலும் கடவுளின் மேன்மையை அறிந்துகொள்ளாமலிருந்தேன். கடவுளைப்பற்றிக் கூறுவோரையும் அவருடைய பக்தர்களையும் வைதேன்," என்று தன்னைத்தானே நொந்துகொண்டான்.

அன்று முதல் அவன் கடவுளைத் துதிக்கத் தொடங்கினான். ஆலயத்திற்கு நாள் தவறாமல் சென்றான். அடியார்களை தெய்வமாகவே கருதி மேன்மையை அடைந்தான். ஆதலால்,

தெய்வத்தை வழிபடு

---

## 2. தூக்கணங் குருவிகளும் குரங்குகளும்

ஒரு காட்டில் உள்ள மரத்தில் தூக்கணங் குருவிகள் கூடுகள் கட்டி வசித்து வந்தன. ஒரு இரவில் அங்கே சில குரங்களும் வந்தன. அப்போது பலமான காற்று வீசிற்று. அத்துடன் இடைவிடாமல் மழையும் பெய்து கொண்டிருந்தது. அதனால் குளிர் அதிகரித்தது.

குரங்குகள் தங்குவதற்கு இடமில்லாமல் தவித்து மழையில் நனைந்து கஷ்டப்பட்டன. மழை நின்றவுடன் குளிர்காய எண்ணி நெருப்புக்கு அங்குமிங்கு மலைந்தன. அப்பொழுது தமக்கு முன்

னே தென்பட்ட மினுமினுப் பூச்சிகளைப் பிடித்து வந்தன. அதை நடுவில் வைத்து குளிர்காயச் சுற்றி உட்கார்ந்தன.

அதனைக் கண்ட குருவிகள் குரங்குகளைப் பார்த்து, "ஐயா, உங்களுக்கு மனிதர்களைப் போலக் கைகள் இருக்கின்றன. நீங்கள் ஏன் கூடுகட்டிக் கொண்டு சுகமாக வாழாமல் வருந்துகிறீர்கள். எங்கள் கூடு சிறியதாக இருப்பதால் உங்களுக்கு இடம் கொடுக்க முடியவில்லையே," என்று இரக்கத்தோடு கூறின.

அதைக் கேட்ட குரங்குகளுக்குக் கோபமுண்டாயிற்று. "ஏ மூடர்களே, நீங்களா எங்களுக்குப் புத்தி சொல்லுகிறீர்கள். எங்களுக்கு வேண்டுமானால் நாங்கள் கட்டிக் கொள்ள மாட்டோமோ? எங்களுக்கு வீடு கட்டிக் கொள்ளத் தெரியாது. பிரித்து எறியத் தான் தெரியும்," என்று சொல்லி மரங்களில் ஏறின.

தம்முடைய கைகளுக்கு எட்டின கூடுகளைப் பிரித்து எறிந்தன. பறவைகளைப் பிடித்துத் தரையில் மோதி அடித்துக் கொன்றன.

ஆதலால் மூடர்களுக்கு எக்காலத்தும் புத்தி சொல்லக் கூடாது. புத்தி சொல்லப் புகுந்தால் தீமையே அடைவர்.

துஷ்டர்க்குப் புத்தி சொன்னால் துன்பமே விளையும்

## 3. காக்கையும் குடமும்

முன்னொரு காலத்தில் ஒரு காக்கை மிகுந்த தாகத்தினால் கஷ்டப்பட்டது. நாலாபக்கங்களி லும் அலைந்து திரிந்தது. எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை. கடைசியாக ஒரு வீட்டின் முற் றத்தில் குடமிருப்பதைக் கண்டது.

அங்கே விரைந்து சென்றது. குடத்தில் எட் டிப் பார்த்தது. அக்குடத்தின் அடியில் கொஞ்சம் தண்ணீர் இருப்பதைக் கண்டது. தன்னால் ஆன மட்டும் முயன்றும் அத் தண்ணீரை எட்டிக் குடிக்க முடியவில்லை. அப்பொழுது காக்கைக்கு உண்டான வருத்தம் இவ்வளவு என்று சொல்ல முடியாது. கடைசியில் ஒரு உபாயத்தினால் அத் தண்ணீரைக் குடிக்க நினைத்தது.

உடனே வெளியே பறந்து சென்று சிறு சிறு கற்களை ஒவ்வொன்றாக மூக்கினால் எடுத்து வந்து குடத்திற் போட்டது. குடத்தில் கற்கள் விழ விழ அதில் இருந்த தண்ணீர் மேலே வர ஆரம்பித்தது.

அதனைக் கண்ட காக்கை மறுபடியும் சில கற் களைக் கொண்டு வந்து போட்டது. தண்ணீர் மேலே வந்தது. பிறகு காக்கை அந்தத் தண்ணீ ரைக் குடித்து தன்னுடைய தாகத்தைத் தீர்த்துக் கொண்டு சந்தோஷமாகப் பறந்து போயிற்று.

சிறுவர்களே, அந்தக் காகத்தின் அறிவைப் பாருங்கள்! சிறு சிறு கற்களைப் போட்டால் தண்ணீர் மேலே வரும் என்பதை அறிந்து அவ்வாறு செய்து அதன் தாகத்தைத் தீர்த்துக் கொண்டது. அது அவ்வாறு செய்யவில்லையானால் எவ்வளவு துன்பத்தை அடைந்திருக்கும்?

ஆகையால் நீங்கள் எந்தக் காரியத்தையும் நன்றாக ஆலோசித்துப் பார்க்க வேண்டும். ஆலோசித்துச் செய்தால் முடியாத காரியம் ஒன்றுமே கிடையாது.

முயன்றால் முடியாதது ஒன்றில்லை

---

## 4. ஆப்பை அசைத்த குரங்கு

தென் தேசத்தில் ஒரு சிறிய கிராமம் ஒன்று இருந்தது. அக்கிராமத்தில் கோவில் கிடையாது. அவ்வூரில உள்ளவர்கள் ஒரு கோவிலைக் கட்ட ஆரம்பித்தனர். கோவில் கட்டுவதற்கு வேண்டிய மரங்களை எல்லாம் கொண்டுவந்து சேர்த்தார்கள். ஒரு ஆசாரி தச்சு வேலை செய்து வந்தான்.

அவன் ஒரு மரத்தை இரண்டாக அறுக்க வேண்டியிருந்தது. அம்மரத்தை நன்றாகச் செம்மைப் படுத்தினான். பிறகு ரம்பங்கொண்டு பாதி வரையிலும் இரண்டாக அறுத்தான். சூரியன்

அஸ்தமித்துவிட்டபடியால் தன் வேலையை நிறு த்த எண்ணங் கொண்டான். தான் அறுத்த மரத் தின் பிளவில் ஒரு ஆப்பை அடித்துவிட்டு வீடு சென்ருன்.

அவ்வூரில் குரங்குகள் அதிகம். அவைவிடியற் காலத்தில் வந்து அங்குள்ள மரங்களில் தாவி விளையாடிக் கொண்டிருந்தன. ஒரு குரங்கு அந்த மரப்பிளவில் தனது கையை இட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தது.

மற்ருெரு குரங்கும் அக் கட்டையின்மீது வந்து உட்கார்ந்தது. அது சும்மா இராமல் அக் கட்டையில் அடித்திருந்த ஆப்பை அசைத்து எடுத்தது. எடுத்தவுடன் குரங்கின் சரீரம் அப்பிள வில் அகப்பட்டுக் கொண்டு அது நசுங்கி இறந்து போயிற்று. மற்ருெரு குரங்கின் கை அதில் சிக்கிக் கொண்டது.

பிறகு ஆசாரி அங்கு வந்து பார்த்தான். குரங்கு இறந்து கிடப்பதையும் மற்ருெரு குரங்கு கையை இட்டுக்கொண்டு வருந்துவதையுங் கண் டான். மறுபடியும் ஆப்பை அடித்து அக்குரங்கை விடுவித்தான்.

ஆதலால் எக்காரியத்தையும் ஆலோசித்துச் செய்ய வேண்டும். இல்லையானல் ஆராயாமற்

செய்த குரங்கைப் போலத் துன்ப மனுபவிக்க நேரும்.

ஆராயாச் செயல் அனர்த்தமே விளைக்கும்

---

## 5. மூடன் சேர்க்கையால் வந்த கேடு

ஒரு ஊரில் ஒரு செட்டியார் வசித்து வந்தார். அவர் ஒரு நாள் வேறு ஊருக்குச் செல்ல நேர்ந்தது. தன்னுடன் ஒரு வேலைக்காரனையும் அழைத்துக் கொண்டு போனார்.

போகும் வழியில் பொழுது இருட்டி விட்டது. சில திருடர்கள் எதிரே வருவதைக் கண்டனர். செட்டியார் இடத்தில் பண முடிப்பு இருந்தது. அதனால் அவர் திருடர்களிடமிருந்து தப்பிக் கொள்ள எண்ணி சிறிது தூரத்தில் போய் செடி மறைவில் படுத்துக் கொண்டார். வேலைக்காரன் வழியிலேயே ஒரு இடத்தில் படுத்துக் கொண்டான்.

இவர்கள் வந்து படுத்துக் கொண்டதைத் திருடர்கள் கவனிக்க வில்லை. வழியில் நடந்து செல்லும் பொழுது வேலைக்காரனுடைய கால் ஒரு திருடன் காலில் தட்டுப் பட்டது. இருள் அதிகமாக இருந்த படியால் மனிதரென்பதை அவனால் அறி

ந்து கொள்ள முடியவில்லை. "இது என்ன கட்டைபோ லிருக்கிறதே," என்ருன்.

வேலைக்கா ரனுகிய அந்த மூடனுக்குக் கோப முண்டாயிற்று. "சீ! சீ! உன் வீட்டுக் கட்டை இடுப்பில் ஐந்து பணம் முடிந்து கொண்டு படுத்திருக்குமோ!" என்ருன். திருடர்கள் அவனைப் பிடித்து நன்ருக அடித்து அவனிடம் இருந்த ஐந்து பணத்தையும் பிடுங்கிக்கொண்டனர்.

உடனே 'இப்பணம் செல்லுமோ செல்லாதோ' என்று பேசிக் கொண்டனர். அவ் வார்த்தையை மூடன் கேட்டான். முன்னைக் காட்டிலும் அதிகக் கோப முண்டாயிற்று. "என்னுடைய பணம் அப்படிப் பட்டதா? உங்களுக்குச் சந்தேகமாக இருந்தால் அதோ செடி மறைவிலிருக்கும் செட்டியாரிடம் காண்பியுங்கள்," என்று சுட்டிக் காட்டினுன்.

திருடர்களுக்கு ஆனந்த முண்டாயிற்று ; கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததைப் போல நினைத்தனர். செட்டியாரிருக்குமிடம் சென்று அவரைப் பிடித்துக் கொண்டனர். அவரிடமிருந்த பணமுடிப்பைப் பிடுங்கிக் கொண்டு நன்ருக உதைத்து அனுப்பினுர்கள்.

செட்டியார் தான் கொண்டு சென்ற பணத்தையு மிழந்து உதையுடன் திரும்பி வீடு சென்ருர்.

உடம்பிலிருந்த காயங்கள் ஆறுவதற்கு ஒரு மாத காலமாயிற்று.

அவர் இவ்வாருன துன்பத்தை யடையக் காரண மென்ன? மூடனுடைய சேர்க்கை யல்லவா? ஆதலால் நாம் புத்திசாலிகளோடு சிநேகம் செய்ய வேண்டுமே யல்லாமல் மூடர்களுடன் சிநேகம் செய்யக் கூடாது.

மூடர் நேசம் தேடும் நாசம்

---

## 6. கர்வங்கொண்ட வேலையாட்கள்

ஒரு ஊரில் ஒரு அதிகாரி இருந்தான். அவன் எங்காவது செல்ல வேண்டுமானல் பல்லக்கிலே தான் ஏறிச் செல்லுவான். பல்லக்குச் சுமப்பதற்காக சில வேலையாட்களைத் தன்னிடம் வைத்துக் கொண்டிருந்தான். அவர்கள் கர்வங்கொண்டவர்கள்.

ஒரு நாள் அவனுடைய பசுங்கன்று காணமல் போய்விட்டது. தன்னுடைய வேலையாட்களை அழைத்தான். "நாலா பக்கங்களிலும் சென்று பசுங்கன்றைத் தேடி வாருங்கள்," எனக் கட்டளை இட்டான்.

அதற்கு அவர்கள், "ஐயா பிரபுவே! நாங்கள் பல்லக்குச் சுமக்கும் வேலைக்காக உங்களிடம் வந்

தோம். நாங்கள் ஓடிய கன்றைத் தேடவும், புல் லறுத்து வந்து போடவும் வரவில்லை" என்றார்கள்.

பிரபு அவர்களுடைய கர்வத்தைக் கண்டார். உடனே பல்லக்கை எடுத்து வாருங்கள் எனக் கட்டளை இட்டார். அவர்கள் சுமந்துவந்தனர். அதன் மீது ஏறி உட்கார்ந்தார். "இந்த முள் வேலியைத் தாண்டிச் செல்லுங்கள்; இம்மலையின்மீது ஏறிச் செல்லுங்கள்;" என்று சொல்லி, கன்றைத் தேட ஆரம்பித்தார்.

வேலையாட்களுள் சிலருக்குக் காலில் காயம் பட்டது. சிலருக்கு முள் குத்தியது. கை கால் ஓய்ந்து போயின. உடனே பல்லக்கைக் கீழே இறக்கினர். "பிரபுவே, நாங்கள் அறியாமல் கூறினோம்; எங்களை மன்னிக்க வேண்டும்; கன்றைத் தேடிக் கொண்டு வருகின்றோம்," எனச் சொல்லினர்.

அதற்குப் பிரபு, "நீங்கள் என்னிடம் பல்லக்குச் சுமப்பதாகத்தான் பேசி வந்தீர்கள். கன்றைத் தேடுவதாகப் பேசவில்லை. கன்றைத் தேடுவது என்னுடைய வேலை; பல்லக்குச் சுமப்பது உங்களுடைய வேலை" என்றார்.

மறுபடியும் அவர்கள், தாங்கள் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் எனவணங்கினர். பின்பு அவர்களே சென்று கன்றைத் தேடி வந்து வீடு சேர்த்தார்கள்.

அவ்வேலையாட்களுக்கு இவ்வளவு துன்பங்களும் எதனால் வந்தது? கர்வங்கொண்டு தம் யஜமானனுக்குக் கீழ்ப்படியாததனால் அல்லவா? ஆதலால் நாமும் கீழ்ப்படிந்து நடப்போமானால் சந்தோஷமுண்டாகும்.

கர்வங் கொண்டவர் கஷ்டமே படைவார்

———

## 7. கரடியும் இரண்டு சிநேகிதர்களும்

ஒரு ஊரில் இரண்டு சிநேகிதர்கள் வசித்து வந்தார்கள். அவர்களுள் ஒருவன் பெயர் சுப்பன். மற்றொருவன் பெயர் கந்தசாமி. அவ்விருவரும் வேறு ஊருக்குப் போக எண்ணிப் புறப்பட்டனர். வழியில் மரஞ்செடிகள் அடர்ந்த காட்டைக் கடந்து செல்ல நேர்ந்தது. அக்காட்டில் சிங்கம், புலி, கரடி, முதலிய துஷ்ட மிருகங்கள் வசித்து வந்தன.

அக்காட்டில் வழியே சென்றுகொண்டிருக்கும் போது, சுப்பன் என்பவன் கந்தசாமியைப் பார்த்து, "நண்பனே! எனது சிநேகிதர்களுக்கு ஆபத்து வரும்பொழுது நான் கைவிடவே மாட்டேன்" என்று தன்னையே புகழ்ந்து பேசிக் கொண்டு போனான்.

இப்படிப் போகும்போது பக்கத்திலுள்ள புதரிலிருந்து ஒரு கரடி உறுமும் சத்தம் கேட்டது.

சுப்பன் பக்கத்திலிருந்த மரத்தில் விரைவாக ஏறி ஒளிந்து கொண்டான். கந்தசாமிக்கு மரமேறத் தெரியாது. அவன் தைரியமாகக் கீழே படுத்துக் கொண்டு பிணம்போலக் கிடந்தான்.

புதரிலிருந்த கரடி வெளியே வந்தது. சுப்ப னிடம் சென்று அவனை மோந்து பார்த்தது. பிறகு புரட்டிப் புரட்டிப் பார்த்தது. கரடி பிணத்தைத் தின்னுது என்பதைச் சுப்பன் முன்னமே அறிந்தி ருந்தான். மூச்சை அடக்கிக் கொண்டான். கரடி தன்னுல் ஆனமட்டும் புரட்டிப் பார்த்து, அவனைப் பிணமென்று நினைத்துப் போய்விட்டது.

கந்தசாமி மரத்திலிருந்தே அவற்றைப் பார்த் துக் கொண்டிருந்தான். கரடி சென்ற பிறகு கீழே இறங்கினுன். சுப்பனிடம் வந்தான். "நண்பனே, இப்பொழுது கரடி உன்னிடம் வந்து ஏதோ இரக சியம் சொல்லிவிட்டுப் போயிற்றே. அதை என்னி டம் சொல்லலாகாதா," எனக் கேட்டான்.

அதற்கு சுப்பன், கந்தசாமியைப் பார்த்து, "கரடி என் காதண்டை வந்து, 'ஆபத்தில் உதவி செய்யாதவனேடு சிநேகம் கொள்ளாதே' என்று சொல்லிப் போயிற்று" என்ருன். கந்தசாமி தன் னைத் தானே முன்னுல் புகழ்ந்து பேசிக் கொண்ட தனுல் வெட்க மடைந்தான்.

ஆகையால் தற்புகழ்ச்சியாகப் பேசிக்கொள்ளுபவர்களோடு எக்காலத்தும் சிநேகம் வைத்துக் கொள்ளக்கூடாது. சிநேகம் செய்தால் ஆபத்து வரும் காலத்தில் நம்மைக் கைவிட்டு வேடிக்கை பார்ப்பார்கள். ஆதலால்,

சேரிட மறிந்து சேர்

---

## 8. தீவினை யகற்று

நாகபுரி என்பது ஒரு ஊர். அங்கு மூன்று திருடர்கள் வசித்து வந்தார்கள். அவர்கள் தினந் தோறும் இராக்காலங்களில் வெளியே சென்று திருடிக்கொண்டு வருவது வழக்கம். ஒருநாள் வழிப் பிரயாணம் செய்துகொண்டிருந்த ஒரு பெரிய வியாபாரியைக் கொள்ளை அடித்தனர். அவனிடம் இருந்த மிகுந்த பொருளைப் பிடுங்கிக் கொண்டனர்.

மறுநாள் ஒரு இடத்தில் தங்கிவர நேர்ந்தது. தங்களுக்குள் சிறியவனாக இருந்தஒருவனை அழைத்தனர். மற்ற இருவரும் அவனைப் பார்த்து, "நாங்கள் இங்கே இருக்கின்றோம். நீ பக்கத்து ஊருக்குச் சென்று சாப்பிட்டு விட்டு எங்களுக்கும் சாப்பாடு வாங்கிவா," என்றனர். அவனும் அவ்வாறே சென்றான்.

அவன் சென்ற பிறகு மற்ற இரண்டு பேர்களும், "நாம் இன்று கொண்டுவந்த பொருளை மூன்று பங்குபோட வேண்டியதா யிருக்கிறது. அவன் திரும்பி வந்தவுடன் அவனைக் கொன்றுவிட்டால் நாமே எடுத்துச் செல்லலாமெனப் பேசித் தீர்மானம் செய்து கொண்டனர்.

சாப்பாடு வாங்கச்சென்றவன், போகும்போதே "அந்தப் பொருளை மூன்று பேர்களும் எடுத்துக் கொள்ள வேண்டி யிருக்கிறது. அவர்களுக்குக் கொண்டுபோகும் உணவில் விஷம் கலந்தால் இருவரும் சாப்பிட்டு இறப்பார்கள். பின்பு அச்செல்வம் முழுவதையும் நாமே அடையலாம். அதனால் பெரிய பணக்காரனுமாகலாம்" என்று ஆலோசித்தான்.

பின்பு அச்சிறியவன் சாப்பிட்டுவிட்டு உணவில் விஷங்கலந்து கொண்டு வந்தான். அவன் அங்கு வந்தவுடன் மற்ற இரண்டு பேர்களும் அவனை அடித்துக் கொன்றனர். பிறகு அவன் கொண்டுவந்த உணவை அருந்தினர். சிறிதுநேரத்திற்கெல்லாம் அவ்விருவரும் இறந்து போயினர்.

ஆகையால், சிறுவர்களே! நாம் பிறருக்குக் கேடுநினைக்கக் கூடாது. நாம் கேடு நினைத்தால் அது நமக்கே வந்து முடியும். ஆதலால் நாம்

எவர்க்கும் நன்மையே செய்ய வேண்டும். நன்மை செய்தால் சுகமாக வாழலாம்.

கேடுவான் கேடு நினைப்பான்

---

## 9. நரியும் மரம்வெட்டியும்

ஒரு நாள் ஒரு வேடன் வேட்டையாடக்காட்டிற்குச் சென்றான். அவனுடன் பலவேட்டை நாய்களும் சென்றன. அந்த நாய்கள் வழியில் ஒரு நரியைக்கண்டு அதைத்துரத்த ஆரம்பித்தன.

சிறிது தூரத்தில் ஒருவன் மரம் வெட்டிக் கொண்டிருந்தான். அவனிடம் நரி சென்றது. அவனைப் பார்த்து, "ஐயா! வேட்டைநாய்கள் என்னைத் துரத்திக் கொண்டுவருகின்றன. நான் இப்பொழுது மறைந்து கொள்ளுவதற்கு ஒரு இடம் கொடுக்க வேண்டும்" எனக் கெஞ்சிக் கேட்டது.

மரம் வெட்டிக்கு அதனிடம் இரக்க முண்டாயிற்று. தன் குடிசையில் போய் மறைந்துகொள்ளச் சொன்னான். நரி குடிசையினுள்ளே சென்று ஒரு மூலையில் பதுங்கிக்கொண்டது.

சிறிது நேரத்திற் கெல்லாம் வேடன் தன் நாய்களுடன் அங்குவந்தான். அங்கு மரம் வெட்டிக் கொண்டிருப்பவனைக் கண்டான். அவனிடம் போய், "ஐயா! இவ்வழியாக ஒரு நரி வந்ததே; நீ அதனைக் கண்டாயா?" என்று கேட்டான். மரம்

வெட்டிடுகிறவன், தனது விரலால் நரி சென்றவழி யைச் சுட்டிக்காட்டிக் கொண்டே "ஐயா ! நான் பார்க்க வில்லையே. அது எவ்வழியாகச் சென்ற தோ?" என்ருன்.

வேடன், அவன் விரலைக் காண்பித்ததைக் கவனிக்கவில்லை. அவனுடைய வார்த்தையை நம் பிக் கொண்டே வேடன் நெடுந்தூரம் சென்ருன். நரி குடிசையினின்றும் வெளியேவந்தது. மரம் வெட்டுகிறவனைத் திரும்பிப்பார்க்காமல் செல்லத் தொடங்கிற்று. அப்போது அவன் நரியைப்பார்த்து "ஏ! நன்றிக்கெட்ட நரியே! நான் உன்னைக்காப்பாற் றினேன். என்னிடம் சொல்லிக் கொள்ளாமல்கூட செல்லுகின்ருயே. நான் இடம் கொடுக்கவில்லை யானுல் உன்கதி என்னவாயிருக்கும்? சற்றுயோசித் துப்பார்" என்று கோபத்துடன் கூறினுன்.

அவ்வார்த்தையைக் கேட்ட நரி, "மரம்வெட் டியே ! நீ சொல்லுவது உண்மைதான் உன்னு லேயே உயிர் பிழைத்தேன். உனக்கு நன்றி செலுத் தக்கடமைப்பட்டவன்தான். ஆனுல் நீ எனக்கு உண்மையாக உதவி செய்யவில்லை. வேடன் உன் னிடம் வந்து கேட்ட போது, நான் இருக்கும் இடத்தைக் காட்டிக் கொண்டே பதில் கூறினுய். அவன் மூடனுக இருந்த படியால் நீ குறித்துக் காட்டியதை அவன் அறிந்து கொள்ளவில்லை. அவன் புத்தி சாலியாக இருந்தால் என்கதி என்ன

வாயிருக்கும். நீ உதவி செய்தும் பயனில்லையே? மனதில் ஒன்றும் செய்கையில் ஒன்று மாக இருப்போரைக் காணவேகூடாது. அதனால் உன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் செல்லுகின்றேன்'' என்றது.

மரம் வெட்டிக்கு வெட்கமுண்டாயிற்று. அன்றுமுதல் அந்தத்தீய குணத்தினின்றும் நீங்கினான்.

சொல்லிய வண்ணம் நல்லவை செய்க

---

## 10. திருடனை ஏய்த்த சிறுவன்

ஒரு ஊரில் ஒரு குடியானவன் இருந்தான். அவனுக்கு ஒரு பிள்ளை உண்டு. அவன் தனது பிள்ளைக்குக் கையில் காப்பு, காதில் வயிரக் கடுக்கன் முதலிய நகைகளைப் போட்டிருந்தான்.

அச்சிறுவன் ஒரு நாள் ஊருக்கு வெளியே சென்று ஒரு கிணற்றண்டையில் விளையாடிக்கொண்டிருந்தான். ஒரு திருடன் அச்சிறுவனைக் கண்டான். நகைகளைத் திருடிச் செல்ல எண்ணங்கொண்டு சிறுவனை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

சிறுவன், அவனுடைய நடையையும் பார்வையையும் கண்டு திருடனென்று தீர்மானம் செய்து கொண்டான். அவனுடைய மனதில் குபீர், குபீர் என்று திகிலுண்டாயிற்று. அழுது கொண்டே நின்றான்.

திருடன் நகைகளுக்காக அவனை நெருங்கி வந்து கொண்டிருந்த போதிலும் எங்கே ஓடி விடு வானே என எண்ணினான். சிறுவனை நெருங்கி, "அப்பா! ஏன் அழுகிறாய்?" என்று கேட்டான்.

அதற்கு அச்சிறுவன், "ஐயா! நான் இந்தக் கிணற்றில் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன். என் கழுத்தில் அணிந்து கொண்டிருந்த வயிரப் பதக்கம் கட்டிய விலையுயர்ந்த சந்திரஹாரம் கிணற் றில் விழுந்து விட்டது. நான் வீட்டிற்குப்போனால் என் தகப்பனார் என்னை அடித்துக் கொன்று விடுவாரே, என்ன செய்வேன்," என்று பொய் சொல்லி மேன்மேலும் அழத் தொடங்கினான்.

திருடன் அவ்வார்த்தையைக் கேட்டான். கிணற்றிலிருக்கும் சந்திரஹாரத்தை முதலில் எடுத் துக் கொள்ளுவோம். பிறகு இவனிட முள்ளதை எடுத்துச் செல்லுவோமென உறுதி செய்துகொண் டான். சிறுவனைப் பார்த்து, "குழந்தாய்! என்னு டைய வேஷ்டி, துண்டு முதலியவற்றை வைத்துக் கொண்டிரு. நான் கிணற்றில் குதித்து உனது நகையை எடுத்துத் தருகிறேன்," என்று சொல்லி தனது துணிகளையும் வேறிடத்தில் திருடி வந்த பொருள்களையும் சிறுவனிடம் கொடுத்துவிட்டுக் கிணற்றில் இறங்கினான்.

சிறுவன் இதுவே தக்க சமயமென அறிந்து வீட்டிற்கு ஓட்டம் பிடித்தான். திருடன் தண்ணீ

ரில் முழுகி முழுகிப் பார்த்தும் கிடைக்கவில்லை. மேலே வந்து பார்த்தான். சிறுவனையும் காண வில்லை.

பின்பு அத்திருடன் கைப்பொருளையு மிழந்து உடுத்தத் துணியுமின்றித் திரும்பினான்.

ஆதலால்,பிறரை ஏமாற்ற எண்ணுகின்றவர் கள் தம் பொருளையு மிழப்பார்கள்.

ஏமாற்றிடுவர் தாம் ஏமாந்திடுவர்

---

## 11. புத்திசாலித்தனமான தீர்ப்பு

ஒரு ஊரில் ஒரு பெரிய தனவானிருந்தார். அவருக்கு மிக்க வயதாகி வியாதியால் கஷ்டப் படும்போது இனி, 'பிழைத்து எழமாட்டோம்'என உறுதி செய்து கொண்டார். அவருக்கு ஒரு புத்தி ரன் உண்டு. அவனுக்கு அப்பொழுது ஐந்து வயது தானிருக்கும்.

தன்னுடைய சிநேகிதனாகிய ஒருவியாபாரியை அழைத்தார். தன்னிடமிருந்த இருபதினாயிரம் வராகனையும் அவனிடம் கொடுத்து,"எனது மகன் பெரியவனாகும் வரையிலும் காப்பாற்று. பிறகுநான் கொடுத்த பணத்தில் உனக்கு இஷ்டமானதை அவனுக்குக் கொடு," என்று சொல்லி இறந்து போனார்.

பல வருஷங்கள் சென்றன. அச்சிறுவனுக்குப் பதினாறு வயதாயிற்று. தன்னை வளர்த்துவந்தவனை

பார்த்து, "ஐயா, எனது தகப்பனுர் உம்மிடம் பொருளைக் கொடுத்து, நான் வேண்டும்போது கொடுக்கச் சொன்னுரே. அச் செல்வத்தை இப் பொழுது எனக்குக் கொடும்" என்று கேட்டான்.

அதற்கு அவன், "சிறுவனே! உன் தகப்பனுர் என்னிடம் இருபதினுயிரம் வராகன் கொடுத்தார். அவர் இறக்கும்போது என்னைப் பார்த்து, உனக்கு இஷ்டமானதைக் கொடு' என்று சொன்னுர். அதன் படி உனக்கு இப்பொழுது ஆயிரம் வராகன் கொடு கிறேன்" என்று சொல்லி பணத்தைக் கொடுத்தான்.

அச்சிறுவன் அதை பெற்றுக்கொள்ளவில்லை. நியாயாதிபதியிடம் சென்முன். தன்னுடைய வழக் கைத் தெரிவித்தான். நியாயாதிபதி அவ்வியா பாரியை அழைத்துவரச் சொல்லி, "இச் சிறுவனு டைய தகப்பனுர் உம்மிடம் என்ன சொல்லி பணத் தைக் கொடுத்தார்," எனக் கேட்டார்.

அதற்கு அவன், "நியாயாதிபதியவர்களே! எனது சிநேகிதர் இறக்கும்போது என்னிடம் இரு பதினுயிரம் வராகன் கொடுத்தார். 'பையன் கேட் கும்போது உமக்கு இஷ்டமான பொருளைக் கொடு' என்று சொன்னுர். அதன்படி ஆயிரம் வராகனைக் கொடுத்தேன். அவன் அதை வேண்டாமென மறு த்து வந்தான்" என்முன்.

நியாயாதிபதி, அவனைப் பார்த்து, அப்பணத் தில் உனக்கு இஷ்டமானதை அல்லவா கொடுக்கச்

சொன்னார். அதனால் நீ சொல்லுகிறபடி உனக்கு இஷ்டமானது பத்தொன்பதாயிரம் வராகன். அதை இந்தச் சிறுவனுக்குக் கொடுத்துவிடு. அவனுக்குக் கொடுப்பதாகச் சொன்ன ஆயிரம் வராகனையே நீ எடுத்துக்கொள்ள வேண்டும்'' என்று தீர்ப்புச்செய் தார். அவனும் அவ்வாறே கொடுத்தான்.

அவ்வூரிலுள்ளவர்கள் அத்தீர்ப்பைக் கேட்டு ஆச்சரியமடைந்தனர். ஆதலால்,

பேராசை பெரு நஷ்டம்

## 12. புத்திமான் பலவானவான்

வடக்கே வெகு தூரத்தில் ஒரு காடு ஒன்றுண்டு. அதில் நீண்ட காலமாக ஒரு சிங்கம் வசித்து வந்தது. அது தினந்தோறும் பசிவந்தபோது கர்ஜிக்கும். அந்த ஒலியைக் கேட்டவுடன் பதுங்கி இருக்கும் மிருகங்கள் நாலா பக்கங்களிலும் ஓட ஆரம்பிக்கும். அப்போது அச்சிங்கம் தனக்கு முன்னே அகப்பட்ட மிருகங்களை எல்லாம் கொன்று தின்னும்.

இவ்வாறே வெகுகாலம் நடந்து வந்தது. ஒரு நாள் மிருகங்களெல்லாம் ஒன்று கூடி, "நம்மினத்தை எல்லாம் சிங்கம் கொன்று குவிக்கிறது. இன்னும் சிறிது நாட்கள் சென்றால் நம்முடைய இனமே இல்லாமற் போய்விடும். ஆதலால் தினந்தோறும் நம்மில் ஒவ்வொருவராகச் சென்று அதற்கு

உணவாவோம்'' என்று பேசித் தீர்மானம் செய்து கொண்டன.

பிறகு எல்லா மிருகங்களும் சிங்கத்தினிடம் சென்றன. சிங்கத்தைப்பார்த்து, "மிருகேந்திரனே, தாங்கள் தங்களுடைய ஆகாரத்திற்காகச் சிரமப் படவேண்டாம். தாங்கள் ஓரிடத்திலேயே இருங் கள்; நாங்கள் தினம் ஒருவாரக வந்து உமக்கு உண வாகின்ருேம்,'' எனச் சொல்லி வேண்டிக் கொண் டன.

சிங்கம் ஓரிடத்திலேயே இருந்தது. மிருகங் கள் முறைப்படி சென்று உணவாகிக் கொண்டே இருந்தன. இது இவ்வாறிருக்க ஒரு நாள் ஒரு முயலின் முறை வந்து சேர்ந்தது. முயல் சிங்கம் இருக்குமிடம் நோக்கிச் சென்று கொண்டே ஆலோசித்தது. " இன்று நாம் இறப்பது திண் ணம்; இதற்கு ஒரு உபாயம் செய்வோம்; அதனுல் நன்மை யுண்டானுல் எல்லா மிருகங்களும் இன்ப மடையட்டும்,'' என எண்ணியது.

முயல் சிங்கத்தின் பசி வேளை தப்பிச் சென் றது. அதனுல் சிங்கம் கடுங்கோபங் கொண்டு முய லைப் பார்த்து, "ஏ! அற்பப் பிராணியே! பெரிய யானையுங் கூட என் பசி வேளை தப்பி வந்ததில்லை? நீ பசி வேளை தவறிவந்த காரணமென்ன சொல்?'' எனக் கோபத்தோடு கேட்டது.

அதற்கு முயல் மிகவும் பயங்கொண்டதைப் போலப் பாசாங்கு செய்து, "சுவாமி! தங்களுடைய பசிவேளைக்கு உதவுவதற்காகவே வந்து கொண்டிருந்தேன். வழியில் ஒரு சிங்கத்தைக் கண்டு சிறிது ஒளிந்திருந்தேன். அது சென்ற பிறகு ஓடி வந்தேன்," எனக் கூறியது.

சிங்கம் முயலைப் பார்த்து, "என்னை அல்லாமல் வேறொரு சிங்கத்தைக் கண்டாயா? அவ்வாறு கண்டிருந்தால் அதை எனக்குக் காட்டு; நான் இப்பொழுதே அதனைக் கொல்லுகின்றேன்," என்றது.

அதைக் கேட்ட முயல் சிங்கத்தை அழைத்துச் சென்றது. அங்கு ஒரு பாழுங்கிணறு இருந்தது. அக்கிணற்றில் மிகுந்த சேறும் சிறிது தண்ணீரும் இருந்தது. அக்கிணற்றைக் காட்டி, 'இதனுள்ளே தான் அச்சிங்கம் இருக்கிறது" எனக் காட்டிற்று.

சிங்கம் உண்மை என நினைத்து கிணற்றில் எட்டிப் பார்த்தது. அதில் அதனுடைய நிழல் காணப்பட்டது. அதனை வேறொரு சிங்கமென எண்ணி உள்ளே பாய்ந்து சேற்றில் அமிழ்ந்தி இறந்தது.

பிறகு அக்காட்டிலிருந்த மிருகங்களெல்லாம் சுகமாகக் காலங்கழித்து வந்தன. ஆதலால் எந்தக்

காரியத்தையும் ஆலோசித்துச் செய்தால் நன்மை யடையலாம்.

தந்திரத்தால் உயிர் தப்பிப் பிழைக்கலாம்

## 13. முடவனும் கொம்புத்தேனும்

ஒரு ஊரில் ஒருவனிருந்தான். அவனால் நடந்து செல்ல முடியாது. உட்கார்ந்து கொண்டே நகர்ந்து செல்லுவான். காலில்லாதவனை முடவன் என்று சொல்லுவதுண்டு.

ஒரு நாள் அவன் ஒரு தெருவின் வழியாக நகர்ந்து போய்க் கொண்டே இருந்தான். அத்தெருவில் சில சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அம்முடவனைக் கண்டனர். அவன் நகர்ந்து செல்லுவது சிறுவர்களுக்கு விளையாட்டாக இருந்தது.

சிறுவர்கள் அவனுக்குப் பின்னே போய், 'முடவா முடவா' என்று கேலி செய்தனர். முடவனுக்குக் கோபம் வந்தது. அவனால் என்ன செய்ய முடியும். வாயில் வந்தபடி சிறுவர்களை வைதான் பக்கத்தில் இருந்த கற்களை எடுத்து எறிந்தான். சிறுவர்கள் பயந்து ஓடினார்கள்.

மறுபடியும் அவன் நகர்ந்து நகர்ந்து வெகு தூரம் சென்றான். அங்கே ஒரு மரத்தின் கொம்பு வளைந்து கைக்கு எட்டும்படி இருந்தது. அதில்

வண்டுகள் தேனைச் சேகரித்து வைத்திருக்கும் தேன் கூட்டைக் கண்டான்.

அதிலுள்ள தேனை எடுத்துக் குடிக்க எண்ணினான். முடவனுக்குக் கொம்புத்தேன் எவ்வாறு கிடைக்கும்? ஆனாலும் ஆசை யாரைத்தான் விட்டது. மரத்தடிக்குச் சென்றான். தனது கைகளை நீட்டி நீட்டிப் பார்த்தான். எட்டவில்லை. என்ன செய்வான் பாவம். மேலே பார்த்து, கொட்டாவி விட்டுக் கொண்டே இருந்தான்.

சிறுவர்கள் மறுபடியும் அங்கு வந்து அவனைக் கேலி செய்தனர். முடவன் முன் போலவே வாயில் வந்தபடி வைதான். கற்களை எடுத்து வீசினான். சிறுவர்கள் அவனுடைய கோபத்தைக் கண்டனர். அவனுக்கு புத்தி கற்பிக்க வேண்டு மெனத் தீர்மானித்தனர்.

பக்கத்திலிருந்து கற்களை எடுத்து வந்துதேன் கூட்டின்மீதுவீசி எறிந்தனர். அதிலிருந்துதேனீக்கள் புறப்பட்டன. சிறுவர்கள் ஓடிப்போய் விட்டார்கள். முடவனே இவ்வாறு செய்தான் என, தேனீக்கள் நினைத்து அவனைக்கடித்தது. முடவன் மிகுந்த துன்பத்தை அடைந்தான். சிறுவர்கள் அதனைக் கண்டு சிரித்தார்கள்.

முடவன் தன்னைத்தானே நொந்து கொண்டான். நாம் நமக்குக் கிட்டாத பொருளை நினைத்தத

னுல் அல்லவா இத்துன்பமுண்டாயிற்று என்று சொல்லிக் கொண்டான்.

ஆகையால் நமக்குக் கிடைக்காத பொருளின் மேல் ஆசை வைக்கலாகாது. ஆசை வைத்தால் துன்பமே உண்டாகும். ஆதலால்,

கிட்டாதாயின் வெட்டென மற

——

## 14. பிராமணனும் புலியும்

ஒரு பெரிய காட்டில் ஒருபுலி வசித்து வந்தது. அது அக்காட்டில் உள்ள மிருகங்களைக் கொன்று தின்று ஜீவித்து வந்தது. அதற்கு மிகுந்த வயதாயிற்று. அதனுல் நடக்க முடியவில்லை. அது ஒரு வழியில் இருந்துகொண்டு ஏதேனும் உணவு கிடைத்தால் உண்ணும். இல்லையானுல் பட்டினி கிடக்கும். அது உபாயத்தினுல் தனக்கு உணவை தேடிக்கொள்ள நினைத்தது.

ஒருநாள் ஒரு குளக்கரையில் போய் உட்கார்ந் கொண்டது. ஒரு கையில் தருப்பையும் மற்றொரு கையில் ஒரு பொற்காப்பையும் வைத்துக்கொண்டு இருந்தது.

அந்தவழியாக ஒரு பிராமணன் சென்று கொண்டிருந்தான். அவனை அப்புலி அழைத்து, “பிராமணனே, இந்தக் காப்பை உனக்குக்கொடுக்க எண்ணினேன். நீயோ மகா உத்தமனுகக் காணப்

படுகின்ருய்; ஆதலால் இதைப் பெற்றுச்செல்'' என்றது.

பிராமணன் அதைக் கண்டான். பொற்காப்பின்மீது ஆசை கொண்டான். ஆயினும் புலியினிடம் எவ்வாறு செல்வது என எண்ணி சற்று விலகி நின்ருன். பின்பு புலியைப் பார்த்து "புலியாரே? உம்மை நான் எவ்வாறு நம்பமுடியும். நீரோ கொலைத் தொழிலையே செய்யக் கூடியவர்; நீர் இப்பொழுது தருமம் செய்யக் காரணமென்ன'' என்ருன்.

அதைக்கேட்ட புலி, "ஏ பிராமணு! எனக்கு நகமும் பற்களும் இல்லை. எனக்கோ வயது அதிகமாயிற்று. கண்களும் தெரியவில்லை. எழுந்து நடக்கவும் சக்தியற்றவனுனேன்; இனிமேலேனும்பாவத் தொழிலைவிட்டு தருமம் செய்ய எண்ணினேன்; ஆதலால் என்னுடைய வார்த்தையில் நம்பிக்கை வை; இதோ! இத்தடாகத்தில் மூழ்கி பொற்காப்பை பெற்றுச்செல்'' என்றது.

இதைக்கேட்ட பிராமணன் புத்திகெட்டு அதன் வார்த்தைக்கு இணங்கினன். தடாகத்தில் மூழ்குவதற்காகப் போனன். துறையில் தண்ணீரும் சேறும் நிறைந்திருந்தது. காலை வைத்தான். கால் சேற்றில் அழுந்தியது. அவனல் ஆனமட்டும் முயன்று பார்த்தும் காலை எடுக்க முடியவில்லை.

புலி பக்கத்தில் சென்றது; "நான் உன்னைச் சேற்றினின்றும் எடுக்கின்றேன்" என்று சொல்லி நெருங்கிற்று. அவனை அறைந்து கொன்று தின்றது.

ஆதலால் துஷ்டர்களுடைய வார்த்தையில் எப்பொழுதும் நம்பிக்கை வைக்கலாகாது. அவர்களை நம்பினால் தீமையே வந்து சேரும்.

துஷ்டரைக் கண்டால் தூர விலகு

---

## 15. பேராசை கூடாது

அரிபுரம் என்பது ஒரு ஊர். அங்கே ஒரு வைசியன் இருந்தான். அவன் பெயர் தருமதத்தன். அவனுடைய தாயார் தகப்பனார் ஆகிய இரண்டு பேர்களும் இறந்து போனார்கள். அவன் மட்டும் தனிமையாக வசித்து வந்தான்.

அவ்வூருக்கு ஒரு மந்திரவாதி வந்து சேர்ந்தான். அவன் தலையை மொட்டை அடித்துக் கொண்டும் விபூதி அணிந்து கொண்டும் இருந்தான். அவனை தருமதத்தன் கண்டான். தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். உணவு முதலியன கொடுத்தான்.

பிறகு மந்திரவாதி தருமதத்தனைப் பார்த்து, "தத்தா, நான் இரும்பைப் பொன்னாக்குவேன். ஈயம் இரசம் முதலியவற்றை வெள்ளியாக்குவேன். இன்னும் இவ்வாறான காரியங்களைச் செய்யும் வல்

லமை என்னிடம் உண்டு. நீ மிகவும் நல்லவனாக இருப்பதால் உன்னிடம் தெரிவித்தேன். மனதில் வஞ்சனை யுடையவர்களுக்கு இவ்விஷயங்களைத் தெரிவிக்க மாட்டேன். ஆதலால் உனது செல்வங்களை என்னிடம் கொடு; அவற்றைத் தங்கமாக்கித் தருகின்றேன்" எனக் கூறினான்.

தருமதத்தன், அவனுடைய வார்த்தைகளைக் கேட்டான். உண்மை என்று நம்பினான். வீட்டிலுள்ள பொருள்களை எல்லாம் கொண்டு வந்து மந்திரவாதிக்கு முன்னே வைத்தான். மந்திரவாதி அவற்றைக் கண்டு "பெரிய வைசியனாகிய உன்னிடம் இருக்கும் பொருள் இவ்வளவு தானா? இது உலையில் வைத்து உருக்கும்போது சிந்துவதற்குக் கூடக் காணாது. ஆதலால் நீ என் பின்னே வந்தால் உனக்கு வேண்டிய மட்டும் பொருள் தருகிறேன்," என்று கோபத்தோடு கூறினான்.

தருமதத்தன் மந்திரவாதியைப் பார்த்து, "ஐயனே! கோபிக்க வேண்டாம்; சற்று இவ்விடம் இருங்கள்" என்று சொல்லிப்போய் நிலம், வீடு முதலிய எல்லாவற்றையும் விற்று வந்து பொருளைக் கொடுத்தான்.

மந்திரவாதி ஆனந்த மடைந்தான். அப்பொருளை ஒன்றாகச் சேர்த்து உருட்டினான். ஒரு குகையில் வைத்து மூடி நெருப்பை உண்டாக்கினான். நெருப்பு எரியத் தொடங்கும்போது ஒரு

பொடியைத் தூவிப் புகையை எழுப்பினன். அப்பொழுது தருமதத்தனுக்குத் தெரியாமல் பொன் வைத்திருந்த குகையை மறைத்து வைத்துக் கொண்டு வேருெரு குகையை அங்கே வைத்தான்.

பிறகு தருமதத்தனைப் பார்த்து, "இக்குகையை உன் கையினுல் எடுத்து நெருப்பில் வை" என்முன். தருமதத்தனும் அவ்வாறே செய்தான். "கடைசியாக ஒரு புடம் வைக்கவேண்டும். அதற்கு காற்று நுழையாத ஒரு இடம் வேண்டு" மென்று சொல்லி ஒரு அறையைப் பெற்ருன். அதில் நெருப்பை உண்டாக்கினன்.

அந்தக் குகையை எடுத்து வந்து புதிதாக உண்டாக்கிய நெருப்பில் வைத்தான். தருமதத்தனை அங்கே இருக்கச் சொன்னன். பிறகு அவனைப் பார்த்து, "நீ மூன்று நாட்கள் வரையும் இங்கே இரு; ஒருவரோடும் பேசக்கூடாது; உண்ணக் கூடாது; நான் காளி கோவிலில் ஒரு யாகம் செய்ய வேண்டியதா யிருக்கிறது. அதனை முடித்த பிறகு தான் இக் குகையை எடுக்கவேண்டும். நான் நான்காவது நாள் காலையில் வருகிறேன்" என்று சொல்லிச் சென்ருன.

தருமதத்தன் அவ்வறையிலேயே இருந்தான். அங்குகாற்று என்பதே கிடையாது. புகையோ அதிகமாயிற்று. சரீரத்தினின்றும் வியர்க்கத் தொடங்கிற்று. பெருமூச்சுவிட்டான். வெளியே

செல்லவும் மனமில்லை. இத்துன்பங்களை யெல்லாம் அனுபவித்துக் கொண்டே மூன்று நாட்கள் வரை உள்ளே இருந்தான். காளி கோவிலுக்குச் சென்று வருவதாகச் சொன்ன மந்திரவாதி அவ்வூரைவிட்டு நீங்கினான். காடு, மலை, கடல் முதலியவற்றைக் கடந்து தன் ஊர் சேர்ந்தான்.

நான்காவது நாள் பொழுது விடிந்தது. தருமதத்தன் மந்திர வாதியை எதிர் நோக்கினான். அவன் வரவில்லை. பிறகு காளிகோவிலில் சென்று தேடினான். அங்குமில்லை ஊர் முழுதும் சுற்றித் திரிந்தான். எங்கும் காணாமையால் வீடு சென்றான். அக்குகையை எடுத்துப் பார்த்தான். அதில் இரும்புத்துண்டங்கள் இருந்தன மிகுந்த விசனத்தோடு கீழே போட்டான். மயக்கத்தால் தானும் கீழே விழுந்து இறந்து போனான்.

பேராசைப்பட்டதால் அல்லவா உயிரையே இழக்க நேர்ந்தது. ஆதலால்,

பேராசைப்படுவோர் பெருந்துயரடைவர்

——

## 16. குரங்கும் முதலையும்

முன்னொரு காலத்தில் கங்கை நதிக்கரையில் ஒரு நாவல் மரமிருந்தது. அதில் சுமுகன் என்னும் வானரம் வசித்து வந்தது. அக் கங்கையில் வசித்து வந்த ஒரு முதலை தினந்தோறும் நாவல் மர நிழலில் வந்து தங்குவது வழக்கம்.

ஒரு நாள் அக்குரங்கு முதலையைப் பார்த்து, "நண்பனே ! நீ என்னுடைய வீட்டிற்கு விருந்தாக வந்திருக்கின்றாய்; ஆதலால் உனக்குச் சில நாவற் பழங்களை தருகின்றேன்" என்று சொல்லி சில பழங்களைப் பறித்துப் போட்டது. முதலை அதைத் தின்று சந்தோஷத்துடன் சென்றது.

அன்று முதல் முதலைக்கும் குரங்குக்கும் சிநேகமுண்டாயிற்று. முதலை தினந்தோறும் அம் மரத்தடிக்கு வரும் குரங்கு சில பழங்களைக் கொடுக்கும். முதலை அதைத் தின்றுவிட்டு, சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து செல்வது வழக்கமாயிருந்தது.

ஒரு நாள் முதலை சில பழங்களைக் கொண்டு போய் தனது பெண்சாதிக்குக் கொடுத்தது. அப் பழங்களைத் தின்ற பிறகு அது ஆண் முதலையைப் பார்த்து, "இப்பழங்கள் உனக்கு எங்கே இருந்து கிடைத்தன?" என்று கேட்டது. ஆண்முதலை "எனக்கு ஒரு சிநேகிதன் இருக்கின்றான். அவன் தினந்தோறும் இப்பழங்களைக் கொடுப்பான். வழக்கம்போல் இன்றுகொடுத்ததை உனக்காகக்கொண்டு வந்தேன்" என்றது.

அவ்வார்த்தையைக் கேட்ட பெண் முதலை, "இக்கனிகள் மிகவும் இனிமையாக இருக்கின்றன. இவற்றைத் தினந்தோறும் தின்பவனுடைய ஈரல்

மிகவும் இனிமையாக இருக்கும். அதன் ஈரலை எனக்குக் கொண்டு வந்து கொடுக்க வேண்டும். இல்லையானால் இப்பொழுதே உயிர் விடுவேன்" என்றது.

அதற்கு ஆண் முதலை, "அவன் நீண்ட நாள் சிநேகிதன். அவனுக்குத் தீங்கு நினைக்கக்கூடாது" என்று சொல்லியும் பெண் முதலை கேட்கவில்லை. ஆண் முதலை வருத்தத்தோடு குரங்கினிடம் சென்றது.

குரங்கு முதலையைப் பார்த்து, "நண்பனே! இன்று ஏன் வருத்தத்தோடு இருக்கிறாய்" எனக் கேட்டது. அதற்கு முதலை, "வேறொன்றுமில்லை. என் மனைவி என்னைப் பார்த்து, 'நீ தினந்தோறும் சுமுகனிடமிருந்து பழங்களை வாங்கித் தின்கின்றாய்; அவனை நம் வீட்டிற்கு ஒரு நாளாவது அழைத்துக் கொண்டுவர வேண்டாமா? என்று என்னைக் கோபித்தாள். ஆதலால் தயவு செய்து இன்று என் வீட்டிற்கு நீ விருந்து உண்ண வரவேண்டும்" என்று கூறியது.

அதற்கு சுமுகன், "நான் உன் வீட்டிற்கு எவ்வாறு வருவேன்? என்றால் தண்ணீரில் நீந்த முடியாது. ஆதலால் உணவை இங்கே கொண்டுவா" என்றது. அதற்கு முதலை, "நண்பனே! நீ என் முதுகில் ஏறி உட்கார்ந்து கொள். உனக்குச் சிறி

தும் துன்பமில்லாமல் அழைத்துக் கொண்டு போகின்றேன்'' என்றது. குரங்கு அதன் வார்த்தையை நம்பி, முதலையின் முதுகில் ஏறி உட்கார்ந்து கொண்டது. முதலை தண்ணீரில் நீந்திச் சென்றது. சிறிது தூரம் சென்றதும், இனி தன்னிடமிருந்து குரங்கு தப்பமுடியாது என்று எண்ணிய முதலை, "நண்பனே, நேற்று நீ கொடுத்த பழங்களை என் மனைவியிடம், கொடுத்தேன். அதனுடைய இனிமையைக் கண்டு உனது ஈரல் வேண்டுமென்றாள். இல்லையானால் இறந்து போவேன் என்றாள். அதற்காகவே உன்னைக் கொண்டு போகிறேன். ஆதலால் நீ இறக்கத் தயாரா யிரு'' என்றது.

குரங்கு சிறிதும் அஞ்சவில்லை. முதலையை நோக்கி, "நண்பனே, இது ஒரு பெரிய காரியமா! இவ்விஷயத்தை அங்கேயே சொல்லியிருக்கக் கூடாதா? அடடா! என்னுடைய ஈரலைக் கழுவி மரத்தில் அல்லவா உலர வைத்திருக்கிறேன். என்னைக் கரைக்குக் கோண்டு போனால் உடனே எனது ஈரலை எடுத்துக் கொடுத்து விடுகிறேன்'' என்றது.

முதலை அவ்வார்த்தையை உண்மையென நம்பி, மறுபடியும் கரைக்குவந்தது. உடனேகுரங்கு மரத்தில் ஏறிக்கொண்டது. சிறிது நேரஞ் சென்று

முதலே, "நண்பனே! ஈரலே விரைவாகக் கொடு" என்றது. அதற்குக் குரங்கு "ஏ! நன்றியற்றவனே, ஈரல் சரீரத்தைவிட்டு இருக்குமா? இனி இவ்விடத்திற்கு வராதே, ஓடிப்போ" என்றது.

அது கேட்ட முதலே வருத்தத்துடன் அவ்விடம் விட்டுப் போய்விட்டது.

ஆதலால், துஷ்டர்களுடைய சிநேகத்தில் நம்பிக்கை வைக்கலாகாது. ஆபத்துவந்தகாலத்தில் மனங்கலங்காமல் அதனின்றும் நீங்கும் வழியைத் தேட வேண்டும்.

கஷ்டம் வருங்கால் கலங்கலாகாது

---

## 17. துஷ்டர்களுக்கு இடங்கொடுக்கலாகாது

ஒரு பட்டணத்தை ஒரு அரசன் ஆண்டு வந்தான். அவனுடைய மெத்தையில் மந்த விசர்ப்பிணி என்னும் சீலேப்பேன் நெடுநாளாக வசித்து வந்தது. அது அரசன் நித்திரைபோகும் வரையிலும் சும்மா இருக்கும். அரசன் தூங்கிய பிறகு அவனுடைய சரீரத்தை மெதுவாகக் கடித்து இரத்தத்தை உட்கொள்ளும். இவ்வாறே தனது காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தது.

ஒரு நாள் அவ்விடத்திற்கு ஒரு மூட்டுப் பூச்சி வந்து சேர்ந்தது. அதனைக் கண்ட சீலேப்பேன்,

"நீ யார் ?" எனக் கேட்டது. அதற்கு அம்மூட்டுப் பூச்சி "என் பெயர் டிண்டிபன் நான் உன்னோடு இங்கே சிறிது காலம் வசிக்கலாமென வந்தேன்" என்றது.

அதனைக் கேட்ட சீலைப்பேன், "ஐயா! நீர் இங்கே இருக்கத் தகுந்தவரல்ல. உம்முடைய பற்கள் மிகவும் கூர்மையானவை. நீர் அரசன் விழித்துக் கொண்டிருக்கும் பொழுதே கடித்து விடுவீர். அதனால் எனக்கும் ஆபத்துண்டாகும். அதனால் வேறு இடத்திற்குச் செல்லுங்கள்" எனக் கூறிற்று.

மூட்டுப் பூச்சி, "சுவாமி! நான் அப்படி ஒன்றும் செய்யவில்லை. தாங்கள் எப்படிக் கூறுகிறீர்களோ அவ்வாறே செய்கின்றேன். ஆதலால் தயை செய்து என்னைத் தங்களிடம் வைத்துக்கொண்டு காப்பாற்ற வேண்டும்" என வேண்டியது.

சீலைப்பேன் அதன்மீது இரக்கங்கொண்டது. அதனுடைய வார்த்தைகளை நம்பியது. பிறகு, மூட்டுப் பூச்சியைப் பார்த்து, "அன்பனே? நீ எங்கேயாவது ஒளிந்து கொண்டிருக்க வேண்டும். அரசன் படுத்த உடனே கடிக்கக் கூடாது. அவன் நன்றாகத் தூங்கும் போது இலேசாகக் கடித்துக் கொஞ்ச இரத்தத்தையே குடிக்க வேண்டும்" என்றது. மூட்டுப் பூச்சி அதற்கிணங்கி அங்கேயே தங்கியது.

இராக்காலம் வந்தவுடன் அரசனுடைய வேலையாட்கள் வந்து மெத்தையைத் தட்டி விரித் தார்கள். அரசன் வந்து படுத்துக் கொண்டான். அவன் உடனே தூங்கவில்லை. சிறிது நேரம் விழித்துக் கொண்டே இருந்தான். மூட்டுப் பூச்சி சும்மா இருக்குமா ? அரசனை வெடுக்கென்று கடித்தது. அரசன் திடுக்கிட்டு எழுந்து தன் வேலை யாட்களைக் கூவினான்.

அவர்கள் விளக்கை யெடுத்துக் கொண்டு ஓடிவந்தனர். அதற்குள் மூட்டுப் பூச்சி கட்டிலின் இடையில் போய் மறைந்து கொண்டது. சீலைப் பேனினால் விரைவாகச் செல்ல முடியவில்லை. வேலையாட்கள் அதனைக் கண்டு, 'இதுவே நம் அரசனைக் கடித்தது' எனச் சொல்லிக் கொன்றனர். சீலைப்பேன் மூட்டுப் பூச்சிக்கு இடங்கொடுத்த தனால் இறந்தது.

ஆதலால் எப்பொழுதும் துஷ்டர்களுக்கு இடங்கொடுக்கலாகாது. இடங்கொடுத்தால் நம் முடைய உயிருக்கே ஆபத்து நேரிடும்.

துஷ்டர் சிநேகம் துயர்பல விளைக்கும்

---

## 18. பிறரை ஏமாற்ற எண்ணக்கூடாது

ஒரு பட்டணத்தில் ஒரு வணிகனிருந்தான். அவன் பெயர் தேவதத்தன். அவன் பெரிய பணக்

காரணுக இருந்து சிறிது காலத்திற்குள் தனது செல்வ முழுவதையு மிழந்தான்.

பின்பு,பொருள் தேடவேண்டுமென்ற எண்ண முண்டாயிற்று. வெளிதேசங்களுக்குச் சென்று பொருள் தேட நினைத்துப் புறப்பட்டான். அவனிடம் ஆயிரம் இரும்புக் கம்பிகள் இருந்தன. அவற்றைத் தன் சிநேகிதனிடம் கொடுத்துச்சென்ருன்.

அங்கே சென்று பலவிதமான உபாயங்களால் பொருள் தேடத்தொடங்கினுன். ஆனுல் அவனுடைய எண்ணம் பலிக்கவில்லை. திரும்பவும் தனது ஊரடைந்து தன் சிநேகிதனிடம் சென்று இரும்புக் கம்பிகளைக் கொடுக்கும்படி வேண்டினுன். அயலார் பொருளை அபகரிக்கும் எண்ணமுடைய அவன், "இரும்புக் கம்பிகளை எலிகள் தின்று விட்டன" எனக்கூறினுன். தேவதத்தன் ஒன்றும் கூருமல் திரும்ப வீடுசென்ருன்.

சில நாட்கள் சென்றன. ஒரு நாள் அந்தச்சிநேகிதனுடைய பிள்ளை தெருவில் விளையாடிக் கொண்டிருந்தது. தேவதத்தன் அப்பிள்ளையைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று ஓரிடத்தில் ஒளித்துவைத்தான். பிறகு தன் சிநேகிதனைக் காணச் சென்ருன். அப்பொது அவன், "என்னுடைய குழந்தை எங்கே" எனக்கேட்டான்.

அதற்கு வியாபாரி, "உனது பிள்ளையைப் பருந்து தூக்கிச் சென்றது" என்றான்.

அவன் சிநேகிதனுக்குக் கடுங்கோபமுண்டாயிற்று. நியாயாதிபதியிடம் சென்று தெரிவித்தான். நியாயாதிபதி இருவரையும் வரவழைத்து விசாரிக்கத் தொடங்கினார்.

"ஏ! வியாபாரியே! இவனுடைய பிள்ளை எங்கே? நீ அழைத்துச் சென்றாயாமே?" என்றார். அதற்கு அவன், "இவன் பிள்ளையைப் பருந்து எடுத்துச் சென்றது" என்றான்.

நியாயாதிபதி அதனைக் கேட்டார். உடல் குலுங்க நகைத்தார். "இது என்ன புதுமையாக இருக்கின்றது. எங்கேயாவது பிள்ளையைப் பருந்து எடுத்துச்சென்றது உண்டா? நான் இதுவரையில் கேள்விப்பட்டதே இல்லை" என்றார்.

அதற்கு வியாபாரி, "சுவாமி! இரும்புக் கம்பிகளை எலிகள் தின்னும்போது, பிள்ளையைப் பருந்து எடுத்துச் சென்றது ஒரு ஆச்சரியமாகுமா?" என்றான்.

அதனைக் கேட்ட நியாயாதிபதி முன்பு நடந்தவைகளை விசாரித்தறிந்தார். பிறகு சிநேகிதனைப் பார்த்து, "நீ அவனுடைய இரும்புக் கம்பிகளைக் கொண்டுவந்து கொடுத்தால் உனது பிள்ளையையும் அவன் கொடுப்பான்" எனத் தீர்ப்புக் கூறினார்.

உடனே அவன் தன்னிடமிருந்த இரும்புக் கம்பிகளைக் கொடுத்துவிட்டுப் பிள்ளையை அழைத்துக்கொண்டு சென்றான்.

ஆதலால் ஒருவரை ஒருவர் ஏமாற்ற நினைக்கக்கூடாது.ஏமாற்ற நினைப்பவர் மோசம் போவார்கள்.

பிறர்பொருள் விரும்புவோர் பெருந்துயரடைவர்

---

## 19. பொய் பேசக்கூடாது

ஒரு ஊரில் ஒருவனிருந்தான். அவனிடம் கெட்ட ஒழுக்கங்களே குடிகொண்டிருந்தன. ஒரு நாள் அவன் வீட்டிற்கு அவனுடைய குரு சென்றார். அவனை அழைத்து, "உன்னிடமிருக்கும் கெட்ட வழக்கங்களை யெல்லாம் விட்டுவிடு" என்றார்.அதற்கு அவன், "சுமாமி! எல்லாவற்றையும் விட என்னால் முடியாது. தாங்கள் சொல்லுவதற்காக ஏதேனும் ஒன்றைமட்டும் விட்டுவிடுகின்றேன்" என்றான்.

குரு அப்படியானால் "இன்று முதல் பொய் சொல்வதை விட்டுவிடு" என்று சொன்னார். அவன் அன்று முதல் பொய் சொல்வதே கிடையாது. ஒரு நாள் அரசன் அரண்மனைக்குத் திருடச் சென்றான். அப்பொழுது அரசன் மாறு வேஷத்தோடு வந்

தான். அவனைப் பார்த்து, "எங்கே போகிறாய்?" என்றான். அதற்கவன், "அரசன் மாளிகைக்குத் திருடப் போகிறேன்; நீயும், வா" என்று அரசனையும் அழைத்துக்கொண்டு போனான்.

அரசனை வாயிலில் நிறுத்தினான். அவன் உள்ளே சென்று பெட்டியைத் திறந்தான். அதில் மூன்று இரத்தினங்கள் இருந்தன. அவற்றுள் இரண்டை மட்டும் எடுத்துக் கொண்டான். வெளியே வந்து அரசனிடம் ஒன்றைக் கொடுத்து தான் ஒன்றை எடுத்துக்கொண்டான்.

மறுநாள் பொழுது விடிந்தது. அரசன் தன்னுடைய மந்திரிகளை அழைத்தான். "நம்முடைய அரண்மனையில் இராத்திரி திருட்டு நடந்திருக்கிறது. அதனைக் கவனியுங்கள்" என்றான். மந்திரி உள்ளே சென்று பார்த்தான். இரண்டு இரத்தினங்கள் மட்டும் திருடப்பட்டிருப்பதை அறிந்தான். தான் ஒன்றை எடுத்துக்கொண்டு அரசனிடம் போய் 'மூன்று இரத்தினங்களும் களவு போயின' என்று கூறினான்.

உடனே அரசன் மந்திரியின் திருட்டுத் தொழிலை அறிந்தான். இரவில் வந்த திருடனை அழைத்து வரச்சொன்னான். அவனை விசாரித்தான். அவன் உள்ளதை உள்ளபடியே கூறினான். அரசன் தனக்குத் திருடன் கொடுத்த இரத்தினத்தைக் காண்பித்தான்.

பிறகு மந்திரியை வேலையினின்றும் நீக்கினான். அத்திருடனை மந்திரியாக்கினான். அவனும் மந்திரித் தொழிலைப் பார்த்துக்கொண்டு வந்து மேன்மையை யடைந்தான். மற்றக்கெட்ட வழக்கங்களையும் விட்டுவிட்டான்.

அவன் திருடனாக இருந்தும் மந்திரி பதவி எதனால் கிடைத்தது. உண்மை சொன்னதனாலல்லவா? ஆதலால்,

போய்யை யொழித்தோர் போற்றப்படுவர்

## 20. அரசனும் வண்ணானும்

கலிங்கம் என்பது ஒரு தேசம். அதை ஒரு அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு ஒரு வண்ணான் துணிகளை வெளுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தான். அவன் நன்றாக வெளுப்பான். அரசன் அவன் செய்த சலவையைக் கண்டான். ஆநந்த மடைந்தான். வண்ணானை அழைத்து, "நான் உனக்கு உன் இஷ்டம்போல் வெகுமதி கொடுக்க எண்ணியிருக்கிறேன். உனக்கு வேண்டியதைக் கேள்" என்றான்.

வண்ணான் அவ்வார்த்தையைக் கேட்டான். அளவில்லாத மகிழ்ச்சி யடைந்தான். அரசனைப் பார்த்து, "மகாராஜா! நான் தங்களிடம் மந்திரி வேலை பார்க்க விரும்புகின்றேன்" என்றான்.

அரசனிடம் புத்திக் கூர்மையும் அனுபவ முள்ள மந்திரி ஒருவர் இருந்தார். அவரை வீட்டிற்குப் போகச் சொன்னான். அந்த வண்ணானையே மந்திரியாக வைத்துக் கொண்டான். இச்செய்தி எங்கும் பரவியது.

சில நாட்கள் சென்றன. வேற்று நாட்டரசர்கள் இந்த அரசனோடு சண்டை செய்ய எண்ணினர். 'பழைய மந்திரி இருந்தால் நம்மால் வெல்ல முடியாது. ஆதலால் இதுவே தக்கச்சமயம்' என்று சொல்லிப் புறப்பட்டனர்.

கலிங்க நாட்டரசன் அதனை அறிந்தான். தன் மந்திரியை அழைத்தான். "பகைவர்கள் யுத்தத்திற்கு வருகிறார்களே நாம் என்ன செய்வது" என்றான். மந்தரி, "அரசே! பொறுங்கள். அவர்கள் வரட்டும் பார்த்துக் கொள்ளுவோம். என்னை நம்பி இருங்கள்" என்றான்.

அவர்கள் வந்து அரசனுடைய மாளிகையை முற்றுகை இட்டுக்கொண்டனர். அப்பொழுது அரசன் மந்திரியைப் பார்த்து, இப்பொழுது என்ன சொல்லுகிறாய் ?" என்றான். அதற்கு மந்திரி, "ஐயா! கடவுள் உமது பகைவரை இங்கேகொண்டு வந்து விட்டுவிட்டார். இன்னும் என்ன செய்ய எண்ணி யிருக்கின்றாரோ ? அவருடைய எண்ணத்தை யாரால் அறிந்துகொள்ள முடியும். ஆனு

லும் பயப்பட வேண்டாம். என்னை நம்பி யிருங் கள்" என்ருன். திரும்பவும் அவன் அரசனை நோக்கி, "அரசே! நமது பட்டணத்தை அவர்கள் கைப்பற்றிக் கொண்டதனுல் நமக்கு என்ன குறை கள் வரப்போகிறது? இராஜ்யத்தை அரசாளு கிறது உமக்கும் கஷ்டமாக இருக்கிறது. எனக்கும் கஷ்டமாக இருக்கிறது. இந்தக் கஷ்டங்கள் எல் லாம் நமக்கு எதற்காக? நான் இந்த மந்திரி வேலை க்கு வருவதற்கு முன்னுல் நூறு வீடுகளில் வேலை செய்து கொண்டு இருந்தேன். இப்பொழுதுகூட ஐம்பது வீடுகளில் வேலை செய்கிறேன். எனக்கு வரும் பணத்தில் தங்களுக்குப் பாதி கொடுக்கின் றேன். இதற்காகத் தாங்கள் வருந்த வேண்டி யதே இல்லை" என்ருன்.

அதற்குள்ளாக பகைவர்கள் எல்லாவற்றை யும் கைப்பற்றிக் கொண்டனர். 'வண்ணுனை மந் திரியாக்கிய குற்றத்தால் தனக்குத் துன்பம் வந்த' தென அரசன் வருந்தினுன்.

ஆதலால், எவர்க்கு எப்பதவி தகுந்ததோ அதனையே கொடுக்க வேண்டும். எந்தக் காரியத் தையும் ஆராய்ந்தே செய்யவேண்டும். இல்லை யேல் துன்பத்திற்கு ஆளாவார்கள்.

ஆராயாச்செயல் அனர்த்தமே விளைக்கும்

———

## 21. எண்ணித் துணிக கருமம்

இராவணன் இலங்கைக்கு அரசன். அவனுடைய சகோதரன் குபேரன். குபேரன் எட்டு திக்குப் பாலர்களுள் ஒருவன். அவன் செல்வத்திற் சிறந்த சீமான். அவன் எங்குச் சென்றாலும் தன்னுடைய புஷ்பக விமானத்தில் ஏறிச் செல்லுவான். அவனுடைய சேனைத் தலைவன் பெயர் மணிமந்தன்.

ஒருநாள் குபேரனும் மணிமந்தனும் புஷ்பக விமானத்தில் ஏறிச் சென்றார்கள். மணிமந்தன் மகா அகம்பாவம் பிடித்தவன். விமானம் விரைவாகச் சிறிது உயரத்தில் சென்று கொண்டிருந்தது. அவன் எச்சிலை அடிக்கடி கீழே உமிழுவான் அவ்வாறு உமிழும்போது கீழே யாரேனும் இருக்கின்றார்களா என்பதை கவனிப்பதே கிடையாது.

வழக்கம்போல் எச்சிலை உமிழ்ந்தான். அப்போது ஒரு முனிவர் கால் நடையாகச் சென்று கொண்டிருந்தார். அவ்வெச்சில் அவர் தலையில் விழுந்தது. மிகுந்த கோபம் கொண்டார். மேலே பார்த்தார். புஷ்பக விமானத்திலிருப்பவர்கள் குபேரன், மணிமந்தன் என்பதை அறிந்துகொண்டார்.

உடனே மணிமந்தனைப் பார்த்து, "இப்படித் தவறுதலான காரியத்தைச் செய்யலாமா? எக்காரியத்தையும் ஆராய்ந்து செய்யவேண்டுவதில்லையா?

அதிலும் உன்னைப் போன்றவர்கள் அவசியம் கவ னிக்க வேண்டும். நீ இப்பொழுது செய்த குற்றத் திற்காக உனது சேனையுடன் நீயும் ஒரு மனிதனுல் வெல்லப்படுவாய்" எனச் சாபமிட்டார்.

பிறகு குபேரனைப் பார்த்து; "குபேர! மணி மந்தனே உனது சேனுதிபதி, அவன் குற்றம் செய் யும்போது அவனைக் குற்றத்திற் செல்லவிடாமல் காக்க வேண்டுவது உனது கடமை. அவன் மகா அகம்பாவம் கொண்டவனுக எச்சில் உமிழும் போது நீ தடுக்காமல் பார்த்துக் கொண்டிருந் தாயல்லவா? ஆதலால், உன்னைச் சேர்ந்தவர்க ளெல்லாம் ஒருமானிடனுல் துன்பத்தை அடை வார்கள். அதனை நீ கண்டு வருந்தக் கடவாய்" எனச் சாபமிட்டார்.

அதன் பலனுக ஒரு சமயம் வீமனுல் குபேர னுடைய சேனைகள் தோல்வியடைந்தன. அதனைக் கண்டு குபேரன் மிக வருந்தினுன்.

ஆதலால் எந்தக் காரியத்தையும் ஆலோசித் துச் செய்யவேண்டும். இல்லையானுல் துன்பமுண் டாகும்.

7140

நண்ணிய கருமமும் எண்ணித் துணி

## 22. சிலந்திகாப்பாற்றிய சிற்றரசன்

வடதேசத்தை ஒரு அரசன் ஆண்டுவந்தான். அவன் ராஜபுத்திரர்களுடைய வமிசத்திற் பிறந்தவன். அவனுக்கு ஒரு குமாரன் உண்டு. பகைவர்கள் அரசன் மீது படை யெடுத்துவந்து சண்டை செய்து கொன்றனர்.

அவ்வரசனுடைய குமாரன் தப்பிப் பிழைக்க எண்ணங் கொண்டான். ஒருவருக்கும் தெரியாமல் ஓடி, பெரிய காட்டை அடைந்தான். பகைவர்கள் அரசகுமாரனை ஊர் முழுவதும் தேடினர். கிடைக்கவில்லை. அன்றையப் பொழுதும் போய் விட்டது. அதனால் அவனை மறு நாட்காலையில் ஓடிப்பிடிக்கலாமென எண்ணித் தம்வீடு அடைந்தனர்.

காட்டை அடைந்த அரச குமாரன் ஒரு மலையின் பக்கம் சென்றான். அங்கு ஒருபெரிய குகை தென்பட்டது. அதனுள் சென்று உட்கார்ந்தான். கடவுளைத் தியானித்துக் கொண்டே இருந்தான். பிறகு நன்றாகப்படுத்துத்தூங்கினான். விடியுமுன் ஒரு சிலந்தி குகையின் வெளிப்புறத்தில் ஒரு வலை பின்னியிருந்தது.

அவனுடைய பகைவர்கள் விடியற் கால சாமத்தில் எழுந்து ராஜபுத்திரனைத்தேடிச் சென்றனர். தற்செயலாக இவனிருந்த குகையின் பக்க

மாகவே வந்து சேர்ந்தார்கள். அவர்களுடைய குரலின் ஒலியைக்கேட்டு ராஜபுத்திரன் திடுக்கிட்டு எழுந்தான். ஒன்றுந் தோன்றாமல் பதுங்கி இருந்தான்.

அப்பொழுது அங்குவந்த விரோதிகளுள் ஒருவன் "அரசகுமாரன் இக்குகையினுள்ளே தான் ஒளிந்திருப்பான்" என்றனன். சிலர் 'ஆம்' என்றனர். அவர்களுள் ஒருவன், "அவன் இக் குகையினுள் இல்லை. அவன் இக்குகைக்குள் சென்றிருந்தால், இதன் முன்னே காணும் சிலந்தியின் வலை யறுபட்டிருக்க வேண்டும். அது அறுபடாமலிருப்பதனால் நிச்சயமாக அவன் இதனுள் இல்லை" என்றான்.

அதனைக் கேட்ட மற்றவர்கள் 'ஆம்' என்றனர். உடனே வேறு இடங்களில் தேடப் போய் விட்டார்கள். ராஜபுத்திரன், 'தன்னைக் காப்பதற்காகவே கடவுள் சிலந்தியை அனுப்பினார்' என் எண்ணினான். கடவுளின் அரிய செயலை நினைத்து நினைத்து மனமுருகினான்.

பின்பு காட்டில் இருந்து பலவிதமான கனிகளைத்தின்று காலத்தைக்கழித்தான். கொஞ்சகாலத்திற்குப் பிறகு ராஜபுத்திரன் சிலசேனைகளைத் தன் பக்கம் சேர்த்துக் கொண்டான். மறுபடியும் பகைவர்களோடு யுத்தம் செய்து தன் நாட்டைப்பெற்று, சுகமாக வாழ்ந்து வந்தான்.

ஆதலால், நமக்கு எவ்வளவு ஆபத்துவந்த காலத்தும் கடவுளையே தியானிக்க வேண்டும். அவர் நமக்கு வேண்டிய நன்மைகளையே செய்வார்.

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்

---

## 23. குறும்பனால் உயிர்துறந்தவர்

கங்கை என்பது ஒரு பெரிய நதி. அதில் எப்பொழுதும் தண்ணீர் சென்று கொண்டே இருக்கும். அதில் இறங்கிச் செல்ல முடியாது. அக்கரை செல்ல வேண்டுமானால் ஓடத்திலேறித்தான் செல்ல வேண்டும்.

ஒரு ஓடத்தில் ஒரு பெண் ஏறியிருந்தாள். அவள் தன்னுடன் ஒரு கட்டுச் சுள்ளிகளையும் வைத்திருந்தாள். அதே ஓடத்தில் ஒரு பாம்பாட்டியும் தன் பாம்புப் பெட்டியுடன் ஏறினான். குரங்காட்டியும் வந்து அதில் உட்கார்ந்திருந்தான். ஓடம் புறப்பட ஆரம்பித்தது.

அந்த சமயத்தில் ஒரு குறும்புத்தனமுள்ள சிறுவன் ஓடிவந்தான். "ஐயா! நான் அவசரமாகப் போகவேண்டும். நானும் வருகிறேன். என்னையும் ஏற்றிச் செல்ல வேண்டும்" என வேண்டினான். ஓடக்காரன் அதற்கு இசைந்து அவனையும் ஏற்றிக் கொண்டான். ஓடம் நடு ஆற்றில் சென்று கொண்டிருந்தது.

'ஒரு குறும்புள்ள சிறுவன் நூறு குரங்குக்குச் சமானம்' என்று சொல்லுவார்கள். அவனுடைய குறும்புத்தனம் அவனைச் சும்மா இருக்கவிடுமா? அங்கே இருந்த கட்டிலிருந்து ஒரு சுள்ளியை எடுத்தான். குரங்கைக் குத்தினான். அது எழுந்து பாம்புப் பெட்டியின் மீது பாய்ந்து குதித்தது. பாம்பு சீறிக்கொண்டு வெளியே புறப்பட்டது.

அதனைக் கண்டவர்கள் பயந்து நடுங்கினார்கள். தப்பிப் பிழைக்க எண்ணி ஓடத்தின் ஒரு ஓரத்தில் போய் ஒதுங்கினார்கள். ஒரே பக்கத்தில் கனம் அதிகரித்தது. உடனே ஓடம் கவிழ்ந்தது. எல்லோரும் உயிர் துறந்தனர்.

அதனால் அன்று முதல் 'குறும்பன் ஓடம் கவிழ்ந்ததைப் போல' என்ற பழமொழி வழங்கி வருகிறது.

ஆதலால் நாம் எப்பொழுதும் குறும்பு செய்யக் கூடாது. குறும்பு செய்பவர் தனக்குத் தானே துன்பத்தைத் தேடிக் கொள்ளுவதோடு மற்றவர்களுக்கும் கேட்டை உண்டாக்குவார்கள்.

குறும்பினால் கேடு உறுவது திண்ணம்

---

## 24. வானம்பாடியும் குஞ்சுகளும்

ஒரு வயலில் ஒரு வானம்பாடி தன் குஞ்சுகளை வைத்துக் காப்பாற்றி வந்தது. தினந்தோறும் அது வெளியே சென்று இறைதேடிக்கொண்டு வந்து

தன் குஞ்சுகளுக்குக் கொடுத்து வந்தது. அவ்வய லில் அந்நிலத்தின் சொந்தக்காரன் நெல் பயிர் செய்திருந்தான். பயிர் முற்றி கதிர் அறுக்கும் காலம் நெருங்கிற்று.

வானம்பாடிக்கு நிலத்தின் சொந்தக்காரன் என்றையதினம் அறுக்கப்போகிருனே என்றகவலை யதிகரித்தது. அது வழக்கம்போல் இறைதேடச் செல்லும்பொழுது தன் குஞ்சுகளைப் பார்த்து, "குழந்தைகளே! நாம் இருக்கும் இடம் நமக்கு இனி ஆபத்து உண்டாகக் கூடிய இடமாக விருக்கி றது. ஆகையால் இந்த நிலத்தின் சொந்தக்காரன் வந்து இவ்விடத்தில் என்ன பேசிக்கொள்ளுகிரு னென்பதை கவனித்து நான் வந்ததும் என்னி டம் சொல்ல வேண்டும்," என்றது. குஞ்சுகளும் ஒப்புக்கொண்டன. வானம்பாடி இறைதேடப் புறப்பட்டது.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அந்த நிலத்தின் சொந்தக்காரனை குடியானவன் தன் மகனுடன் நிலத்தின் ஓரமாக வந்து நின்றுகொண்டே மக னைப்பார்த்து " அப்பா! மகனே! பயிர் முற்றித் தலை சாய்ந்துவிட்டது. கதிர் அறுக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. ஆகையால் நீ நாளையதினம் நமது பக்கத்து வீட்டுக்காரர்களைக் கொண்டு இந்த நிலத்தை அறுப்பதற்குண்டான ஏற்பாடு செய்ய

வேண்டும்,” என்ருன். மகனும் அப்படியே ஒப்புக் கொண்டான். இருவரும் போய்விட்டனர்.

வானம்பாடிக் குஞ்சுகள் குடியானவன் தன்னுடைய மகனிடம் சொல்லியவற்றை அப்படியே தங்கள் தாயிடம் சொல்லின. உடனே வானம்பாடி, “ஆனல் நமக்குப் பயமில்லை. இன்னும் கொஞ்சம் பொறுத்து வேறு இடம் செல்லலாம்,” என்றது.

மறுநாளும் வானம்பாடி தன் குஞ்சுகளிடம் முதல் நாள் சொல்லியது போலவே குடியானவன் சொல்லுவதைக் கவனிக்கும்படி சொல்லிவிட்டு வழக்கம்போல் இறைதேடப் புறப்பட்டது. அன்று சிறிது நேரஞ் சென்றதும் குடியானவன் தன் மகனுடன் வந்து, “பக்கத்து வீட்டுக்காரர்கள் நமக்குதவி செய்யவில்லை. போனல் போகட்டும். நாளைக்கு நம்முடைய சொந்தக்காரர்களைக்கொண்டு கதிர் அறுக்கவேண்டிய ஏற்பாடு செய்” என்று சொல்லிக்கொண்டே வீடு சேர்ந்தார்கள்.

வெளியே சென்ற வானம்பாடி திரும்பி வந்தவுடன் குஞ்சுகள் தாங்கள் கேட்டவைகளை யப்படியே சொல்லின. வானம்பாடி உடனே “இன்னும் நமக்கு ஆபத்துக் கிடையாது,” என்று சொல்லிற்று.

மூன்ரும் நாட்காலையில் வானம்பாடி வழக்கம் போல் தன் குஞ்சுகளிடம் சொல்லிவிட்டு வெளியே

இறைதேடப் புறப்பட்டது. அன்று சாயங்காலம் குடியானவன் தன் மகனுடன், "நமக்கு நம்முடைய அயலார்களும் சொந்தக்காரர்களும் உதவி செய்ய வில்லை. ஆகையால் நாம் அவர்கள் உதவியை எதிர்பார்த்தது பிசகு. நாளைக் காலையில் நாம் இருவருமே கதிர் அறுத்து விடுவோம்," என்றான்.

இதைக் கேட்ட குஞ்சுகள் தங்கள் தாய் வந்ததும் சொல்லின. உடனே தாய், "இனி நாம் இங்கே இருக்கக்கூடாது. இதுநாள் வரையில் குடியானவன் பிறருடைய உதவியை எதிர்பார்த்து வந்தான். அதனால் அவன் காரியம் கைகூடாமலிருந்து வந்தது. எப்பொழுது தானே அதைச் செய்வதாக எண்ணினானோ அதைச் செய்தே தீருவான். ஆகையால் நாம் வேறு இடத்திற்குச் செல்லுவோம்," என்று சொல்லி தன் குஞ்சுகளை மற்றோர் மறைவிடத்தில் கொண்டுபோய் வைத்தது. ஆகையால்,

தன் கையே தனக்குதவி

---

## 25. அரசனை விரும்பிய தவளைகள்

ஒரு பெரிய குளத்தில் அநேக தவளைகள் வசித்து வந்தன. அவைகள் எல்லாம் தங்கள் தங்களிஷ்டம் போல் எல்லாக் காரியங்களையும் செய்து வந்தன. இது சில தவளைகளுக்குப் பிடிக்கவில்லை. உடனே அவைகளெல்லாம் ஒன்று

கூடி கடவுளை நோக்கித் துதி செய்து தங்களுக்கு ஓர் அரசன் தேவை யென்றும், தாங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்க ஹேதுவாயிருக்கு மென்றும் தங்களுக்குள் சச்சரவு உண்டாகாதென்றும் மன்றுடிக் கேட்டுக் கொண்டன.

கடவுள் தவளைகளின் வேண்டுகோளுக்கிரங்கி அவைகள் மனத்தில் உள்ள எண்ணத்தையும் அறிந்து அக்குளத்தின் நடுவே ஒரு பெரிய கட்டையை எறிந்தார். கட்டையானது விழுந்த வேகத்தினுல் குளத்திலுள்ள தண்ணீர் முழுவதும் கலங்கினதோடு தவளைகளும் மிகப் பயந்து தங்கள் தலையைக்கூட வெளியே காட்டாமல் போய் சகதியில் மறைந்து கொண்டன.

கொஞ்சநேரஞ் சென்றதும் குளத்திலுள்ள ஜலமானது அடங்கிற்று. கட்டையும் மிதந்து கொண்டே யிருந்தது. தவளைகளில் தைரியமுள்ளது மெள்ள வெளியே தலையை நீட்டி தங்கள் புதிய அரசர் எப்படி யிருக்கிருர் பார்க்கலாம் என்று தூர இருந்தே பார்த்தது. மற்றவைகளும் மெள்ள மெள்ள நெருங்கிற்று. தங்கள் அரசன் நகராமல் இருந்த இடத்திலேயே இருப்பதைக் கண்டதும் அவைகள் பயப்படாமல் அக்கட்டையின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டன.

தவளைகள் தங்களுக்குக் கிடைத்த இந்த உபயோகமில்லாத அரசரைக்கொண்டு திருப்தி யடை

யாமல் மறுபடியும் கடவுளை நோக்கி தங்களுக்கு இவ்வரசன் உபயோகப் படாதென்றும் வேறொரு அரசன் தேவை யென்றும் மனுச்செய்து கொண்டன.

தவளைகளுடைய கெட்ட எண்ணத்தை யறிந்த கடவுள் ஒரு கொக்கை அவைகளுக்கு அரசனாகை அனுப்பினார். அக்கொக்கானது குளத்தை நோக்கி வந்தவுடன் தவளைகள் ஓடத் தலைப்பட்டன. கொக்கு அநேக தவளைகளை தன்னுடைய கூரிய மூக்கினால் கொத்தித் தின்றது.

தவளைகள் இந்தப் புதிய அரசனையும் அவன் செய்யும் காரியங்களையும் கண்டதும் கடவுளைத் துதி செய்து தாங்கள் முன்போலவே இருப்பதாகவும் தங்களுக்கு அரசனே தேவையில்லை யென்றும் வணக்கத்தோடு கேட்டுக்கொண்டன.

தவளைகளைக் கடவுளும் கண்டு மனமிரங்கி கொக்கைப் போகச்சொல்லிவிட்டு அவைகளைக் காப்பாற்றினார். ஆகையால்,

கிடைத்ததைக்கொண்டு திருப்தியடைய வேண்டும்

---

## 26. கரடியும் அரசிளங்குமாரனும்

ஒரு ஊரில் ஒரு அரசனிருந்தான். அவனுக்கு ஒரு குமாரன் உண்டு. ஒருநாள் அரசன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். செல்லும்பொழுது தன் மகனையும் கூடவே கூட்டிச்சென்றான். வேட்

டை யாடும்பொழுது அரசகுமாரன் காட்டில் தனியாக விடப்பட்டான். சிறு பையனுகையால் காடெல்லாம் தன் தந்தையையும் பரிவாரங்களையும் தேடி அலைந்து காணுமையால் மிக வருந்தினுன்.

அரசனும் தன் புத்திரனைக் காணுமல் காடு முழுவதும் தேடி யலைந்துகொண் டிருந்தான். சூரியன் அஸ்தமிக்கும் சமயமாயிற்று. குகைக்குள் பதுங்கியிருந்த மிருகங்களெல்லாம் வெளிக் கிளம்பின.

அரசிளங்குமாரன் செய்வதின்ன தென்று அறியாதவனுய் ஒரு அடர்த்தியான மரத்தின் மீதேறி உட்கார்ந்து கொண்டான். கொஞ்ச நேரம் சென்றதும் ஒரு சிங்கம் ஒரு கரடியைத் துரத்திக் கொண்டே வந்தது. கரடி பயந்து உடனே அரசகுமாரன் ஏறி உட்கார்ந்திருக்கும் மரத்தில் ஏறிக்கொண்டது. அரசகுமாரன் கரடியைக் கண்டதும் பயந்தான். கரடி தன்னைக் கண்டதும் அரசகுமாரன் பயப்படுகிறுன் என்பதை யறிந்தும் அவனைப் பார்த்து, "ராஜகுமாரா! நீ யொன்றுக்கும் பயப்படவேண்டாம்; நான் உன்னை யொன்றும் செய்யவில்லை" என்று சொல்லிப் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டது.

மரத்தின் கீழே கரடியைத் துரத்திவந்த சிங்கமானது போகாமல் அவ்விடத்திலேயே படுத்துக் கொண்டது. கொஞ்ச நேரம் சென்றதும் அரச

குமாரனுக்குத் தூக்கம் வந்தது. அதை யறிந்த கரடி அவனைத் தன் மடியில் தலையை வைத்துக் கொண்டு தூங்கும்படி சொல்லிற்று. அரசகுமாரனும் அப்படியே வெகுநேரம் தூங்கினான்.

நடுராத்திரியில் கீழேயிருந்த சிங்கமானது கரடியைப்பார்த்து, "கரடியாரே! நீங்கள் செய்வது ஒன்றும் நியாயமாகத் தோன்றவில்லை. தங்கள் மடியில் படித்துத் தூங்குகிறவனோ மானிடன். உமக்கும் எனக்கும் ஜென்மப்பகைஞன். அப்படியிருக்கத் தாங்கள் அவனைக் காப்பாற்றுதல் மிகவும் தப்பிதமானது. ஆகையால் அவனை யப்படியே கீழே தள்ளி விடுங்கள். நான் கொன்று தின்று விடுகிறேன்" என்றது.

இதைக்கேட்ட கரடி, "மிருகேந்திரா! நீ சொல்லுவதுபோல் இவன் எமக்கும் உமக்கும் நம்மினத்தைச்சேர்ந்த வருக்கும் பகைஞனென்பது உண்மையே. இருந்தபோதிலும் என்னையே முற்றிலும் நம்பித்தூங்கும் இவ்வரசிளங் குமாரனுக்கு நான் கெடுதல் நினைக்கக்கூடாது. கெடுதல் செய்தாலும் நினைத்தாலும் என்னைப்போல் நம்பினோரைக் காட்டிக்கொடுக்கும் பாதகன் கிடையாது. ஆகையால் நான் இவனைக் கீழே தள்ளமாட்டேன்" என்றது.

சிறிது நேரஞ் சென்றதும் கரடிக்குத் தூக்கம் வர ஆரம்பித்தது. அது உடனே அரசகுமாரனை

எழுப்பி தனக்குத் தூக்கம் வருகிறதென்று சொல்லி அவன் மடியில் தான் தலைவைத்துக்கொண்டு படுத்துக்கொண்டது. கரடி தூங்க ஆரம்பித்ததும் கீழே இருந்த சிங்கமானது ராஜ குமாரனைப் பார்த்து, "அரசிளங்குமாரனே! நீ நடந்துகொண்டவாறு என்னே ஆச்சரியமாயிருக்கின்றது. மானிடர்களுக்கு ஜென்மப் பகைஞர்களாகிய மிருகங்களுக்கு இடங்கொடுக்கலாகாது என்று பெரியோர் சொல்லி நீ கேள்விப்பட்டதில்லையா? கரடியோ இப்பொழுது தூங்குகிறது. அது விழித்துக் கொண்டதும் முதலில் உன்னைக்கொன்று தின்னும். நீ சரியான புத்திசாலியாயிருந்தால் கரடியை உடனே கீழே தள்ளி விடு. நான் அதைக்கொன்று தின்று பசியாறிச்செல்வேன். உனக்கு என்னாலும் கரடியாலுமிருக்கும் ஆபத்து நீங்கும். ஆகையால் உடனே கரடியைத் தள்ளி விடு" என்றது.

அரசகுமாரனுக்குக் கெட்ட காலம் நெருங்கினபடியாலும் தன் புத்திக்கேற்க சிங்கம் சொல்லிய யாவும் உண்மையென்று தோன்றியபடியாலும், கரடியைக் கீழே திடீரெனத் தள்ளினான். கரடி திடீரென்று தள்ளப்பட்டவுடனே கீழே விழுந்ததும் அது படுத்திருந்த கிளைக்குக் கீழுள்ள கிளையைப் பிடித்துக்கொண்டும் மறுபடி தொத்தியேறிவிட்டது.

கரடி உடனே அரசகுமாரனைப்பார்த்து "ராஜ குமாரா! என்ன, யோசனையின்றி இவ்வாறு செய் தாய்! உன்னைக் காப்பாற்றிய எனக்கு நீ செய்தது மிக்க நன்றி கெட்டதேயாகும். உபகாரம் செய்த வருக்குத் திருப்பி உபகாரம் செய்யாதபோதிலும் அபகாரம் செய்யாமலிருக்கலா மல்லவா?" என் றது.

கரடி நேராகக் கீழே விழாமல் கிளையைப் பிடித்துக்கொண்டு தொத்தி மேலே ஏறினவுடனே அரசகுமாரனுக்கு பயம் ஏற்பட்டது. உடல் நடுங் கியது. நா பேச எழவில்லை. உடனே கரடி "செய்த நன்றியை மறந்து துரோகம் செய்த குற்றத்திற் காக நீ பித்துப் பிடித்தவன் போலாவாய்!" என்று சபித்து விட்டு, பொழுது விடிந்துவிட்டபடி யாலும் கீழேயிருந்த சிங்கமும் போய்விட்டபடியா லும் கரடி மரத்தை விட்டிறங்கிச் சென்றது.

உபகாரம் செய்தவரை உள்ளளவும் நினை




The B. N. Press, Educational Printers, Madras,—1932.

## எமது புதிய பிரசுரங்கள்

---

கதாமஞ்சரி

மலர் I மூன்றும் வகுப்புக்கு ... 0 3 0

கதாமஞ்சரி

மலர் II நான்காம் வகுப்புக்கு ... 0 4 0

கதாமஞ்சரி

மலர் III ஐந்தாம் வகுப்புக்கு ... 0 6 0

கதாகற்பகம்

மலர் I முதல் பாரத்திற்கு ... 0 6 0

கதாகற்பகம்

மலர் II இரண்டாம் பாரத்திற்கு ... 0 7 0

கதாகற்பகம்

மலர் III மூன்றும் பாரத்திற்கு ... 0 8 0

---

*Copies can be had of:—*

**R. V. NATHAN BROS.,**

**TRIPLICANE, MADRAS.**